மான உதிரிப்பாகங்களைக்
காண்டு தயாரிக்கப்படும்

நியூரோன் பம்புகளை
வாங்குங்கள்

வார
முரசொலி
VARAMURASOLI

Pump With Standard
Accessories

C8745 Select
Newtone - Pumps

முரசு 2 ஒலி 131 ஞாயிற்றுக்கிழமை 27-11-1988 (கார்த்திகை 12) ந. ஆகிர் 16 விலை ரூபா மூன்று

# ஸ்ரீமாவோ தலைமை கூட்டணியில் சேர முஸ்லிம் காங்கிரஸ் 10 ஆசனம் கேட்கிறது

எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் எதிர்க்கட்சித் தலைவரான அனுரா பண்டாரநாயக்க கையொப்பமிட்டால் மட்டுமே முஸ்லிம் காங்கிரஸும் கையொப்பமிட்டு இணைந்து கொள்ளும் என அதன் தலைவரான ஜனுப் அஷ்ரப் அறிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதற்கு இணங்க மறுக்குமானல் முஸ்லிம் காங்கிரஸ் ஜனதிபதி தேர்தலில் பிரதமர் பிரேமதாஸவை அல்லது ஒஸி குணசேகராவை ஆதரிக்க வேண்டிய நிலை உருவாகும் எனவும் ஜனுப் அஷ்ரப் மேலும் தெரிவித்துள்ளார் ஐந்து கட்சிக் கூட்டணியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து செயற்பட வேண்டுமானல், அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரஸுக்கு பத்து இடங்களை ஒதுக்கித் தரவேண்டும் எனவும் ஜனுப் அஷ்ரப் புதிய நிபந்தனையை விதித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் ஐந்து ஆசனங்களையும், கொழும்பு மாவட்டத்தில் இரு ஆசனங்களையும், பேருவளை, புத்தளம், களுத்துறை வடக்கு ஆகிய இடங்களில் தலா ஒவ்வொரு ஆசனங்களையும் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்க எதிர்க்கட்சிகளின் கூட்டணி எழுத்து —14 ஆம் பக்கம் பார்க்க

# பாராளுமன்றம் டிசம்பர் 22-ல் கலைக்கப்படும்!

## அரச எம். பிக்களுக்கு சூசகமாக அறிவிப்பு; போதுத்தேர்தல் பெப்ரவரியில் நடக்கும்?

(கொழும்பு)

பாராளுமன்றத்தை டிசம்பர் மாதம் 22-ம் திகதி கலைக்கும் முடிவை ஜனதிபதி எடுத்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தமது கட்சி எம். பிக்கள் மத்தியில பேசும்போது ஜனதிபதி ஜெயவர்த்தன தமது முடிவை சூசகமாகத் தெரிவித்ததாக அறியவந்துள்ளது.

டிசம்பர் 19 ஆம் திகதி ஜனதிபதி தேர்தல் எந்தத்தடங்கலுமின்றி நடைபெறும் பட்சத்தில், 22ஆம் திகதிக்குப் பின்னர் தற்போதைய பாராளுமன்றம் செயற்படாது என்று இச்கூட்டத்தில் ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

சில சிரேஷ்ட அமைச்சர்களும், சில எம். பிக்களும் பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும், ஆனாலும் ஜனதிபதி தமது முடிவை வெளிப்படையாகவே கூறியதாகவும் தெரியவந்துள்ளது.

அனேகமாக அடுத்தாண்டு பெப்ரவரி 24 ஆம் திகதிக்கு முன்னர்புதிய பாராளுமன்றத் தேர்தலை நடத்தக்கூடியதாக நடவடிக்கைகள் எடுக்கப்படலாமென்றும் அரசாங்க வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

## பெற்ரோல், டீசல், மண்ணெண்ணெய் நேற்று யாழ் வந்து சேர்ந்தது

அனுராதபுரத்தில் இருந்து சரக்கு ரயில் ஒன்று நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இந்த ரயிலில் ஐம்பத்திரண்டாயிரம் லீற்றர் டீசலும், இருபத்தி ஆறாயிரம் லீற்றர் பெற்ரோலும், இருபத்தி ஆறாயிரம் லீற்றர் மண்ணெண்ணெயும் இங்குகொண்டு வரப்பட்டன.

இந்த ரயிலில் இது தவிர எழுபத்தி ஐந்து பெரல் என்ஜின் ஒயில் மற்றும் ஒருவகை மருந்துப் பொதிகள் என்பனவும் இங்கு வந்து சேர்ந்தன.

உதயனை முரசொலி வாழ்த்துகிறது

மூன்றாண்டுகளை பூர்த்தி செய்து நான்காவது ஆண்டில் இன்று காலடி எடுத்துவைக்கும் 'உதயன்' பத்திரிகைக்கு 'முரசொலி'யும் அதன் ஊழியர்களும் தங்கள் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வவுனியா தமிழ் மகாவித்தியாலய

## மலகூடக் குழிக்குள் கிடந்த இரு ஆண்களின் அழுகிய சடலம்

(வவுனியா)

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தின் மலகூடக் குழிக்குள் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் அழுகிய நிலையில் மீட்கப்பட்டன.

இங்கிருந்து துர் நாற்றம் வந்ததையடுத்து வித்தியாலய அதிபர் வவுனியா பொலிஸாருக்கு தகவல் கொடுத்திருந்தார்.

பொலிஸாரும், இந்தியப் படையினரும் மூடியையத் திறந்து பார்த்தபோது ஒரு வயோதிபரதும் இளைஞனதும் சடலங்கள் காணப்பட்டன.

— 14ஆம் பக்கம் பார்க்க

## இரு நாட்களில் தமிழ் மாநிலம் உருவாகும் என்கிறார் சிதம்பரம்

(சென்னை)

இலங்கையில் இருநாட்களில் தமிழ் மாநிலம் உதயமாகும். தமிழ் ஆட்சி மொழியாகும், தமிழர் அமைச்சரவை பொறுப்பேற்கவுள்ளது என்று இந்திய மத்திய உள் துறை இணை

— 14ஆம் பக்கம் பார்க்க

### ஜனதிபதி தேர்தல் பிரசாரங்களில்

## ஸ்ரீமாவோவை ஆதரித்து கூட்டங்களில் குமார் உரை

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் ஜனதிபதித் தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை ஆதரித்து ஐந்துகட்சி கூட்டணி சார்பில் பிரசார மேடைகளில் தமிழில் உரையாற்றி வருகிறார்.

பேருவளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் பேசுகையில் அம்மையாரை சமாதானத்தின் பெயரால் ஆதரிக்குமாறு கோரவே தாம் மேடையில் ஏறியுள்ளதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் அடுத்த ஓரிரு தினங்களுள் முன்னணி

—14ஆம் பக்கம் பார்க்க

### அதே இரவில் பல வீடுகளிலும் கொள்ளை

## திருநெல்வேலி முத்துமாரி ஆலய நகைகள் முழுவதும் கொள்ளை

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவிலுக்கு சொந்தமான தங்க நகைகள் நேற்று முன்தினம் இரவு ஆயுதமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது

பத்துப்பேரடங்கிய ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியொன்று இரவு ஏழுமணி போல் மேற்படி கோவிலுக்கு அருகில் உள்ள பூஷகர் சிவலோகநாதக் குருக்களின் வீட்டிலிருந்து இந்த நகைகளை கொள்ளையிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது ஆலயத்துக்குச் சொந்தமான பதக்கம், சிங்கமுகக்காப்பு, உருத்

— 14ஆம் பக்கம் பார்க்க

### வடகிழக்கு மாகாணசபையில்

## ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சிக்கு - 38 ஈ.என்.டி.எல்.எப். கட்சிக்கு - 17

வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலில ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி அறுதிப் பெரும்பான்மையாக முப்பத்தாறு இடங்களில் வெற்றிபெற்றுள்ளதாக இலங்கை இந்திய அரசாங்கங்கள் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளன.

இதில் இருபத்திநான்கு இடங்கள் வடபகுதியில் கிடைக்கப்பெற்றன. மிகுதி பன்னிரண்டு இடங்களும் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் மூலம் கிடைத்தன

—14ஆம் பக்கம் பார்க்க

## நேற்று இடம்பெற்ற மோதலில் இருவர் மரணம்; ஒருவர் காயம்

யாழ். புனித மரியன்னை பேராலயப்பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதல் ஒன்றில் இருவர் மரணமானதாக தெரியவந்துள்ளது. இதில் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலையில வைக்கப்பட்டுள்ளது

இச்சம்பவத்தின் போது காயமடைந்த சென். பற்றிக்ஸ் கல்லூரி விடுதி மாணவர் ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்

மேற்படி சம்பவம் நடைபெற்ற பகுதி நேற்று முற்பகல் முதல் பிற்பகல் வரை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது வீதி வழியாக வந்த பலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

# அஷ்டலக்ஷ்மி கலண்டர் லாபம் கைதடி சிறுவர் இல்லத்திற்கு

நமது நாட்டில் தனிச்சிங்கள‌ச் சட்டம் கொண்டுவரப்பட்டபின்னர் ஏற்பட்ட கலவரங்களினுல் இலங்கையின் கைத்தொழில் துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

இவ்வாறு கைதடி சிவா பிறின்டேர்ஸ் நிலையத்தில் அஷ்டலக்ஷ்மி கலண்டர் சிறப்புவிற்பனைவைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய முன்னுள் யாழ்.இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. செ. ஸ்ரீரங்கநாதன் தெரிவித்தார்.

அஷ்டலக்ஷ்மி வெளியீட்டாளர் திரு. ஆ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு ஷப்ரு நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். திரு. செ. ஸ்ரீரங்கநாதன் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்:- தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் மகாவலித்திட்டம் அபிவிருத்திப் பாதைக்கு முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் இத்திட்டத்தால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை

தமிழ்ப்பிரதேசங்களில் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்திரண்டாம் ஆண்டுவரை கைத்தொழில் வளர்ச்சியடைந்து வந்தது. எண்பத்திரண்டாம் ஆண்டிற்குப்பின்னர் ஏற்பட்ட துயர சம்பவங்களால் மீண்டும் எழமுடியாதவாறு கைத்தொழில்துறை பாதாளத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இப்படியான நேரத்தில் அஷ்டலக்ஷ்மி வெளிவருவது பாராட்டுக்குரியது. கருத்துப்பொதிந்த பொன்மொழிகளும், பொது அறிவு விடயங்களும் இதில் அடங்கியிருப்பது மாணவர்களுக்கும் இது பெரிதும் பயன்படும் என்றார்.

திரு. ஆ கந்தையா தலைமையுரை நிகழ்த்துகையில்:– எதிர்வரும் ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையான அஷ்டலக்ஷ்மி நிறுவனத்தின் இலாபப்பணம் முழுவதையும் கைதடி சைவ சிறுவர் இல்லத்திற்கேவழங்கப்போவதாகவும், இலங்கையில் எந்த கலண்டரிலும் வராத ''எமகண்டம்'' என்னும் விடயம் இதில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆர். எஸ். அச்சக அதிபர் திரு. ப. செல்வநாதன், டாக்டர் சபாநாதன் உட்பட பலரும் உரைநிகழ்த்தினர்.


## யூனிவேர்சல்

FOR GOD AND COUNTRY — UNIVERSAL

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**A/L 90**

கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள்
இன்று ஆரம்பம் (27 - 11 - 88)

11191



## ஆரம்பமாகும் புதிய London Accountancy வகுப்புக்கள்

| | |
|---|---|
| **CIMA** (I. C. M. A.) | |
| Stage I | 3 . 12 . 88 |
| Stage II | 10 . 12 . 88 |
| Stage III | 10 . 12 . 88 |
| **AAT** (London) | |
| Prelim | 3 . 12 . 88 |
| Inter | 17 . 12 . 88 |
| Final | 17 . 12 . 88 |
| **AAT** (Sri Lanka) | |
| Level I | 3 . 12 . 88 |
| Level II | 17 . 12 . 88 |
| Certificate in Accounting | 3 . 12 . 88 |
| **IAB** | |
| Foundation | 3 . 12 . 88 |
| Inter | 17 . 12 . 88 |
| Final | 17 . 12 . 88 |
| **IDPM** | |
| Part I | 3 . 12 . 88 |
| Part II | 17 . 12 . 88 |

Contact :

**North Ceylon Technical Institute**

14, St. Peters Lane
Hospital Road - Jaffna

11178



## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

A/L 90 'C' பிரிவு, 89 பகல்நேர வகுப்பு, 89 வினு விடைவகுப்பு ஆரம்பம்: 11. 11. 1988 பிப 3 மணி மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. கிளைகள்: பருத்தித்துறை, வவுனியா.

11094

### செங்கமாரி
### HEPATITIS

சிறுநீர் மஞ்சளாகவோ சிவந்தோ போனுல் செங்கமாரி. ஈரலைப்பாதிக்கும். ஆபத்தானது. முதிர்ந்தாலும் குணப்படுத்கலாம். கால் அவியல், தலை அவியல், கபால இடி, மாதவிடாய்கால வயிற்றுக் குத்து. வலி, வாதம், அல்சர். சொறிசிரங்கு குணப்படுத்தித் தேர்ச்சி பெற்றவர். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வங்களாவடி– சாட்டிவீதி, ,வேலணை.

11018


## சித்தார்த்தனுக்கு விசா மறுப்பு

அண்மையில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்ட ஜனநாயகமக்கள்விடுதலை முன்னணியின் தலைவர் திரு சித்தார்த்தனுக்கு இந்தியா செல்ல விசா மறுக்கப்பட்டுள்ளதாம். இது தொடர்பாக அவர் இந்தியத் தூதுவரிடம் நேரில் சென்று ஆட்சேபனை தெரிவித்துள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சூடுபட்டுக் காயமுற்றார்

கடந்த புதன்கிழமை வவுனியா பூவரசங்குளம் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்து நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பூவரசங்குளத்தைச் சேர்ந்த மார்க்கண்டு மகேந்திரராசா (28 வயது) துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மூன்று மாதத்தில் முந்நூறு கொலைகள்

கடந்த ஜுலை மாதம் 27ஆம் திகதி முதல் அக்டோபர் மாத இறுதிவரை தென்மாகாணத்தில் மட்டும் முந்நூறு அரசியல் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்றுதென்மாகாண முதல்வர் திரு எம். எஸ். அமரசிறி தெரிவித்துள்ளார்.

## படையினர் மூவர் மோதலில் பலி

கடந்த இரண்டு தினங்களில் வடக்கு, கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இந்தியப்படையினருக்கும் ஆயுதம் தாங்கிய இளைஞர்களுக்கும் இடையிலான மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளதாகஇலங்கை வானொலி அறிவித்தது.

## நியமனம்

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி பிரதேச சபையின் முன்னுள் தலைவரும், நெளுக்குளம் கிராமோதய சபையின் தலைவரும், வவுனியா மாவட்ட பஸ் பிரயாணிகள் சங்கத்தின் செயலாளரும், வவுனியா மாவட்டத்தில்பலபொதுஸ்தாபனங்களில் ஈடுபாடு உடையவருமாகிய பம்பைமடு, திரு. நா. சேனுதிராஜா அவர்கள், வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் இணைப்புக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நான்கு போட்டிகளிலும் முதலிடம்

(வேலணை)

வேலணை கொத்தணி பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இயல், இசை, நாடக, நடனப் போட்டிகளில் முதல் இடங்களை வேலணை சைவப்பிரகாசவித்தியாசாலை பெற்றுள்ளது.

வேலணை கொத்தணி அதிபர் திரு சு சண்முகநாதன் தலைமையில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு வேலணை கொத்தணியைச் சேர்ந்த பதினெரு பாடசாலைகள் [illegible]குபற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.


## வாடகைக்கு கட்டிடம் தேவை
### சுகாதார சேவைகள் திணைக்களம்

யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் $1\frac{1}{2}$ அல்லது 2 கிலோ மீற்றர் சுற்று வட்டத்தில் அரசாங்க அலுவலகமாகவும் மார்புநோய் சிகிச்சை நிலையமாகவும் பாவிப்பதற்கு தகுந்த 2500 சதுர அடிக்குக் குறையாத இடவசதியுள்ள, குழாய் நீர், மின்சாரம், மலசல கூடம் ஆகிய வசதிகளுடன் கட்டிடம் வாடகைக்கு உடனடியாக தேவைப்படுகின்றது.

மேலும் விபரங்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

57, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம்,
09-11-88.

11176



# M '3' Travel

பெருமையுடன் வழங்கும்
உடனடி வேலைவாய்ப்புக்கள்

### சவுதி

1. சமையற்காரர் - Cook
(மேற்கத்தைய கிழக்கத்தைய சமையல்)
5 இடங்கள், Open Visa, சம்பளம் 7000/-
2. Waiters - பரிசாரகர்
4 இடங்கள், Open Visa, சம்பளம் 4000/-
3. Taxi Drivers - வாகன சாரதி
ஓரளவு ஆங்கில அறிவு, 15 இடங்கள்
வயதெல்லை 30 – 45 வருடங்கள்
சம்பளம் 7000/-, Open Visa
4. Electrical Engineer
எலக்ரிக்கல் இன்சினியர் –சம்பளம் 15,000/-
5. Power House Electrician
மின்சார நிலைய மின் இணைப்பாளர்
சம்பளம் 5000/-

### OPEN VISA

6. தொழிலாளர் (Labourers) — 6 இடம்
25 வயதுக்கு மேற்பட்டவர்கள்
7. தொழில்நுட்ப மேற்பார்வையாளர் (Technical Supervisors) — 2 இடம்
8. கைத்தொழில் மின்இணைப்பாளர் (Industrial Electrician) — 1 இடம்

போன்ற வேலைகளுக்கு எம்மிடம் வெற்றிடங்கள் உண்டு

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

## M '3' Travel

- புதிதாகக் கடவுச்சீட்டு செய்ய விரும்புபவர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்படும்
- எங்களிடம் புது கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினுல் உடனடியாக விஸா செய்து கொடுக்கப்படும்
- வாகன சாரதி அனுமதிப்பத்திரம் (Driving Licence) செய்து கொடுக்கப்படும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

இந்திரபவனம்,
சோதி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

த. இந்திரநாதன்
No. 1, 2-ம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

11182

வார முரசொலி

# முற்போக்குக்கு வழிவகுத்த அறிஞர் ஜேம்ஸ் இரத்தினம்

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினத்துக்கும் எனக்கும் பல விடயங்களில் கருத்து வேறுபாடுகள் உண்டு. தமிழாராய்ச்சி மகாநாடு சம்பந்தமான விடயங்கள் முதல் பல விடயங்களில் நாம் வன்மையான கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளோம்.

ஆனால் இந்நூற்றுண்டின் இரண்டாம் சகாப்தத்தில் இரத்தினம் தொடக்கி வைத்த தேசிய ஒருமைப்பாட்டுக்கான



முற்போக்கு நெறி சார்ந்த இயக்கத்தின் தர்க்க ரீதியான தற்கால வாரிசுகள் நாம் என்ற எண்ணத் துணிவின், செயற்பாட்டின் காரணமாக நாம் இன்று நடத்தும் சில இயக்கங்களுக்கு அவர் இப்பொழுது பூரண ஆதரவுதாத் தயங்குகின்றாரெனினும், உட்சுவர் இருக்கப் புறச்சுவரை அலங்கரிக்கின்றோமென்ற குற்றச்சாட்டுக் கூறப்படக் கூடாதென்ற நேர்மைத் தெளிவு காரணமாகவும், கடந்தகால வரலாற்றுப் புருடர்களை மறந்து நிகழ்காலச் செயல்களை நடத்தக் கூடாதென்ற வரலாற்று நிலைப்பாடு காரணமாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும், இலங்கையின் அரசியல் வரலாற்று அறிவுக்கும் பெரிதும் உதவியுள்ள இரத்தினத்தின் சேவைகள் பற்றிய எமது நன்றிக் கடப்பாட்டினை எழுபது வயதினை அவர் எய்தியுள்ள இவ்வேளையில் தெரிவித்தல் அத்தியாவசியமானது என்ற கடமையுணர்வுடன் இச் சிறு குறிப்பை எழுதுகிறேன்.

1924 இல் தோற்றுவிக்கப் பெற்ற மாணவர் காங்கிரஸ் இயக்கம் இலங்கையின் முற்போக்கு இயக்க விடிவெள்ளியாக அமைந்த தன்மையினை திரு. துரைசிங்கம் அவர்கள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றார். இந்த இயக்கம் தோற்றுவித்த உந்துதல் காரணமாக 1925 ஒக்டோபரில் முற்போக்குத் தேசியக் கட்சி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் தோற்றுவிக்கப்பட்டது. அக்கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராக ஜேம்ஸ் இரத்தினம் விளங்கினார். ஏ. ஈ. குணசிங்க தொடக்கிய தொழிலாளர் இயக்கம் மூலம் அரசியல் ருசி பெற்ற இரத்தினம் 1926 இல் பண்டாரநாயக்கா இலங்கைக்குச் சமஷ்டியரசு வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்த பொழுது அதனை எதிர்த்தார் என்பது 1926 ஜூலையில் வெளியான ‘‘சிலோன் மோணிங் லீடர்’’ பத்திரிகை மூலம் தெரிய வருகின்றது.

ஜேம்ஸ் இரத்தினத்தின் முக்கிய அரசியற்பணி என்று கருதத்தக்கது முதலாம் உலக யுத்தத்துக்குப் பின் நவம்பர் மாதம் 11ஆந் திகதி கொண்டாடப் பெறும் ‘‘பொப்பி’’ தினத்துக்கு எதிராகத் தொடங்கிய போராட்டமாகும். பொப்பி தினத்திற் சேர்க்கப்படும் நிதி ஏகாதிபத்திய அபிவிருத்திக்குப் பயன்படுகின்றதென வாதாடிய இரத்தினம், 8-11-1926இல் பொப்பிதின எதிர்ப்புக்கென கொழும்பு டவர் மண்டபத்தின் கூட்டச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். பொப்பிதின எதிர்ப்பியக்கமே இலங்கையில் இடதுசாரியியக்கம் தோன்றுவதற்கு வழிவகுத்த ‘‘சூரியமல் இயக்க’’த்துக்குக் காலாக விருந்தது. சட்ட மாணவனாக விருந்த இரத்தினம் அக்காலத்தில் அரசியல் வானில் முக்கிய இடம் வகித்த முக்கியஸ்தர்கள் பலருடன் இணைந்து தமது போராட்டத்தை நடத்தி வந்தார்.

மாணவப் பருவத்தை அரசியற் போராட்டங்களிலே கழித்த இரத்தினம் தனது தொழில்முறை வாழ்க்கையை மலையகத்திலே தொடங்ினார். பதுளை ஊவாக்கல்லூரியிலும், பின்னர் நுவரெலிய சென்ற் சேவியர் கல்லூரியிலும் முறையே ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய பொழுது அப்பகுதித் தொழிற்சங்க இயக்கங்களிலே முக்கிய இடம் வகித்தார். இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்கப்படவேண்டிய தனவசியத்தையும், அது சம்பந்தமாக அப்பொழுது நிலவிய சட்ட நிலைமையை எடுத்துக் காட்டியும் 1930இல் அவர் வெளியிட்ட அறிக்கை சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததாகும். அக்காலத்தில் அரசியலில் ஈடுபட்டோர் ஆங்கில ஆட்சியின் தாக்கத்தினால் தோன்றிய மத்திய வர்க்கத்தைச் சார்ந்தவர்களேயாவர். எழுத்து மூலம் அரசியற் போராட்டம் நிகழ்த்துவது, பொதுக் கூட்டங்களைக் கூட்டுவது போன்ற நடவடிக்கைகளே புத்திஜீவிகளின் செயற்பாடுகளாக அமைந்தன. ஜேம்ஸ் இரத்தினம் தமது அரசியற் போராட்டங்களை அவ்வழிகளிலேயே ஆற்றி வந்தார். தென்னிந்தியாவிலும் அக்காலத்தில் இந்நிலைமையே காணப்பட்டது என்பது ருசிகரமான ஓர் ஒப்பாய்வு உண்மையாகும்.

புத்திஜீவ அரசியலிலீடுபாடு கொண்டிருந்த இரத்தினம், அரசியலைத் தமது முழுநேரத் தொழிலாக்கிக் கொள்வதற்கான நோக்கத்துடன் பொதுத் தேர்தல்கள் பலவற்றில் போட்டியிட்டார் 1931 முதல் 1952 வரை நான்கு தடவை நுவரெலியாத் தொகுதிக்குப் போட்டியிட்டார். 1944இல் எம். டி. பண்டாவைத் தோற்கடிக்கத் தக்க நிலைமைக்கு வந்திருந்தும் அரசவைப் பிரதிநிதிப் பதவி இவருக்குக் கிடைக்கவேயில்லை. நுவரெலியாவிற் பெறமுடியாது போனதைக் கொழும்பு தெற்கில் பெற முயன்றார். ஆயினும் வெற்றி கிட்டவில்லை.

ஜேம்ஸ் இரத்தினத்தின் அரசியல் நோக்கில் காலத்துக்குக் காலம் சிறுச்சிறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் என்றுமே அறாத அடிச்சுவடு ஒன்று உண்டு. அது இலங்கைத் தமிழ் மக்கள் பிளவுபடுத்தப்படாத ஈழத்தின் பிரிக்கப்பட முடியாத ஒன்றிணைந்த பிரஜைகள் என்பதே யாகும், இலங்கையின் தேசிய முன்னேற்றத்தில் தமிழ் மக்கள் எப்பொழுதும் முற்போக்கு நெறிப்பட்ட அரசியல் நோக்கினைப் பேணவேண்டுமென்பதற்காகவும் அவர் எழுதியுள்ளார்; முயன்றுள்ளார். இந்த அணுகுமுறை காரணமாகவே 1965 இல் தமிழ் மக்கள் யூ. என். பியுடன் சேருதல் கூடாது என்று வாதிட்டார்.

ஜேம்ஸ் இரத்தினம் இந்நூற்றுண்டின் தொடக்க காலத்தில் தமிழ் மக்களின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு வழிவகுத்த முறைமை பற்றி முன்னைநாள் உதவி அமைச்சர் காலஞ்சென்ற திரு க. கனகரெத்தினம் அவர்கள் தாம் எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். 19-5-58 இல் அவர் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளதாவது:-

‘‘தமிழ் மக்களின் தலைவர்களெனப் பலரும் தம்மைத் தாம் முன்னிலைப்படுத்துகின்றனர். இளைஞராக விருந்த காலத்திலேயே தாங்கள் தமிழ் மக்களின் நலனுக்காக ஆற்றியுள்ள சேவைகளை அறியார்களேயானால், தமது தற்போதைய அரசில் வரட்சியினை உணர்ந்து கொண்டவர்களாவார்கள்’’.

ஜேம்ஸ் இரத்தினம் இன்று இலங்கையின் முக்கிய வரலாற்று ஆசிரியர்களில் ஒருவராக மிளிர்ந்துள்ளார். இப்படிக் கூறுவதிலும் பார்க்க, இவர், பிரபல வரலாற்றாசிரியர்கள் தேடிச்சென்று தகவல் பெற்றுக்கொள்ளும் வரலாற்று மூலப் பெட்டகமாக மிளிர்ந்துள்ளார் என்று கூறுவது மிகப் பொருத்தமாகும். இலங்கையிற் பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பகால வரலாறு பற்றியும், இருபதாம் நூற்றுண்டின் முதலிரு தசாப்தங்களிலும் நடந்தேறிய அரசியல் அபிவிருத்திகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கான பல தகவல்களையும், சான்றுகளையும் ஜேம்ஸ் இரத்தினம் இத்துறைகளில் ஆராய்ச்சி செய்யும் அறிஞர்

...13 பக்கம் பார்க்க

## செயற்கரிய செய்தோர்

### கோவூர்க்கிழார்

சங்கப் புலவர்கள் சங்கச் சான்றோர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் அறத்தைப் பாடியதோடு மட்டும் அமையவில்லை. அறத்துக்கு இடர் நேரிடும் போது அஞ்சாது தவிர்க்கவும் முற்பட்டனர். அறத்தைக் காக்கும் தம் பணியை நிறைவு செய்வதற்காக அவர்கள் அரசனோடு அஞ்சாது வாதாடிய பல சந்தர்ப்பங்களும் உண்டு.

மலயமான் என்னும் அரசனைக் கிள்ளி வளவன் என்னும் சோழ அரசன் போரில் வென்றான். மலயமானுடைய பிள்ளைகளைப் பிடித்தான். மிக்க இளம் வயதினராகிய அவர்களை யானைக் காலின் கீழ் இட்டுக் கொல்ல முற்பட்டான். அதனை அறிந்த கோவூர்க் கிழார் என்னும் புலவர் கிள்ளி வளவனிடம் சென்றார்.

‘‘கிள்ளி வளவனே நீ புறாவுக்கு இரங்கிய சோழ மரபில் வந்தவன். இந்தச் சிறுவர்களோ புலவர்களுக்கு வாரி வழங்கிய அரச மரபினர். அழுது கொண்டிருந்த இவர்கள் யானை எதற்காகக்கொண்டு வரப்பட்டது என்பதையே அறியாதவராகி அழுகையை நிறுத்தி யானையைப் பார்க்கிறார்கள். இவர்கள் வஞ்சனை என்பது சிறிதும் அறியாதவர்கள் இவர்கள் யானைக் காலில் இடுதற்கு உரியவர் அல்லர். நிந்தன் கருணைக்குஉரியவர்’ என்றார்.

கோவூர்க் கிழாரின் வாக்குக்கு மதிப்பளித்த கிள்ளி வளவன் சிறுவர்களைக் கொல்லாது விட்டு விடுகிறான். கோவூர்க் கிழார் மலயமானின் பிள்ளைகளை மட்டும் காக்கவில்லை. கிள்ளி வளவனையும் பெரும் பழியிலிருந்து காத்தார். நாட்டில் அறத்தையும் நிம்மதியாக வாழச் செய்தார்.

## தரிசனம்

மனித வாழ்வில் நிச்சயிக்கப்பட்ட ஒன்று மரணம். இவ்வுலகில் பிறக்கும் போதே மனிதனுக்கு இறப்பும் நிச்சயிக்கப்படுகின்றது.

ஆனாலும், இறப்பவர்கள் எங்களுக்கு நெருக்கமானவர்களாக, மிகமிக வேண்டியவர்களாக இருக்கும்போது அது எமக்கு மிகுந்த வேதனை தருவதாகவும், பேரிழப்பாகவும் அமைகின்றது. இந்த வகையில் கடந்த சில நாட்களுக்குள், அடுத்தடுத்து மூன்று தமிழறிஞர்களை நாம் இழக்க நேர்ந்தது இன்றைய காலகட்டத்தில் தாங்க முடியாத இழப்பாகும்.

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், தமிழாராய்ச்சிக்கழக அறிஞர் ஜேம்ஸ் ரத்தினம், வியாகரண சிரோமணி பிரம்ம ஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் ஆகியோரின் திடீர் மரணங்களையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

ஈழத்து இலக்கிய உலகின் மூத்த எழுத்தாளர்களாக இன்று திகழும் பலரின் ஆக்கங்கள் ஆரம்பத்தில் கலைமகள் இதழ்களிலேயே வெளிவந்தன. அதன் ஆசிரியராக பல தசாப்தங்கள் பணிபுரிந்த கி. வா. ஜகந்நாதன் பல தடவைகள் இங்கு வருகை தந்துள்ளார்.

இலங்கையில் பெரும் தொகையான வாசகர்களை மட்டுமன்றி, உயிருக்குயிரான நண்பர்கள் பலரையும் கி. வா. ஜ. அவர்கள் பெற்றுள்ளார்கள்.

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் ஜேம்ஸ் ரத்தினம் அவர்கள். நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு ஊன்றுகோலாக இருந்தவர்களில் இவரும் ஒருவர்.

தமது வாழ்க்கைத் துணைவியரின் நினைவாக திருநெல்வேலியில் பல்கலைக் கழகத்துக்கு அருகில் இவரால் அமைக்கப் பெற்ற எவலின் ரத்தினம் நூலகம் அன்னாரின் தமிழ்ப் பணிக்கு நல்லதொரு சான்றாகும்.

வேதத்தை முறைபாகக் கற்று, சாஸ்திரங்கள் பல உணர்ந்த செம்மையாளர் சீதாராம சாஸ்திரிகள். சமஸ்கிருதத்தின் மாமலையாகத் திகழ்ந்து, வேதநெறி தழைத்தோங்கப் பணிபுரிந்தவர் சாஸ்திரிகள்.

கிரியை வழிபாடுகளில் ஏற்படும் சந்தேகங்களின் போது சாஸ்திரிகள் எடுக்கும் முடிவே முடிந்த முடிவாகும்.

இம் மூவரது வெற்றிடங்களும் இலகுவாக நிரப்பக் கூடியவையல்ல. அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

# தமிழ்வளர்த்த தலைமுறை மறைந்தது

கி.வா. ஜ என்று சுருக்கமாக அழைக்கப் பெறும், வாகீச காலநிதி கி. வா. ஜகந்நாதையர் சென்னையில் காலமானுர் என்ற பத்திரிகைச் செய்தியைப் படித்த உடனே உள்ளத்திலே ஒரு இருள் படர்ந்



தது. பிறந்தவர் இறப்பது திண்ணமேயானுலும் ஒரு சிலருடைய மரணம் நர்மையும் அறியாமல் துக்க இருள்படரவே செய்யும்.

மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுடைய மாணவர் மகா மகோ பாத்தியாய உ. வே. சாமிநாதையர் அவர்கள். இவருடைய மாணுக்கர்தான் வாகீச கலாநிதி கி. வா. ஜ. அவர்கள், மூவரும் இலக்கிய, இலக்கண, சாஸ்திர, தோத்திர நூல்களை நன்கு கற்றுணர்ந்தவர்கள். தாம் கற்று அநுபவித்தவற்றைப் பாமர மக்களும் அநுபவிக்கும் வண்ணம் வாரிவழங்கியவர்கள்.

முதலிருவரின் திறமைகள் அத்தனையையும் ஒரு சேரக் கொண்டு மூன்ருமவர் விளங்கினுர் என்ருல் அது மிகைப்படுத்திச்

## ஆத்மஜோதி நா. முத்தையா

சொல்வதன்று. பெரும் புலவர்களால் இயற்றப் பெற்று பண்டிதர்கள் நாவிலே வளர்ந்த சங்க இலக்கியங்களைப் பாமரரும் படித்து உணருமாறு செய்தபெருமை கி. வா. ஜ. அவர்களையே சாரும்.

இவர் ஒரு முருகபக்தர். இவர் கந்தரனுபூதியையும் கந்தரலங்காரத்தையும் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட சொற்பொழிவுகளால் விளங்க வைத்துள்ளார். அவரது சொற்பொழிவு நூல்களை வாசிக்கும் போதுதான் அவரது அநுபூதி நிலையை நாம் உணர முடியும். அபிராமி அந்தாதிச் சொற்பொழிவில் சாக்த சமய நுட்பங்களையெல்லாம் மிகத் துல்லியமாக விளக்கியுள்ளார். இவரது சொற்பொழிவைக் கேட்பவர்கள் மனமுருகிக் கண்ணீர் பெருக்கினுர்கள் என்பதற்குப் பலசம்பவங்கள் உண்டு.

"பகவந் நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் எவனுக்கு மயிர்க்கூச்செடுத்துக் கண்களில் பக்தி பாஷ்பம் பெருகுமோ அவனுக்கு அது தான் கடைசி ஜன்மம்" என்பது இராமகிருஷ்ண பரமகம்சரது ஆப்தவாக்கியமாகும். இதற்கு இலக்கியமாக விளங்கியவர்கள் கி. வா. ஜ. அவர்கள்.

கி. வா. ஜ அவர்களை நேருக்கு நேராகச் சந்திக்காமலே அவரது எழுத்துக்களைப் படித்து ஏகலைவனைப் போன்ற சீடர்கள் பலர் இருக்கிருர்கள். கி. வா. ஜ அவர்களைத் தான் குருவாக அடைந்த முறைபற்றித் திரு. என். பத்மநாபன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றுர்கள்.

"கல்லூரி மாணவனுக இருந்த காலத்திலிருந்தே எனக்கு முருக பக்தரான கலைமகள் ஆசிரியர் வாகீச கலாநிதி ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களது பேச்சிலும், எழுத்திலும் காந்தத்தை நோக்கி இரும்பு செல்வதைப் போன்ற ஒரு தனிப்பற்றுதல் உண்டு. அப்பெரியாரை இன்றளவும் நான் நேரில் கண்டு தரிசிக்கும் பாக்கியம் பெற்றிராவிடினும், அவர்களை எனது மானசிகக் குருநாதராகக் கொண்டேன். மகாபாரதத்தில் ஏகலைவன் துரோணுச்சாரியாரைக் குருநாதராகக் கொண்டதுபோன்று, நான் முருகன் அருள்பெற்ற முனிவராகிய எனது குருநாதருக்கு மாணவனுக அமைந்துள்ள விபரம் எனது நெருங்கிய நண்பர்கள் ஓரிருவரைத்தவிர ஏனையோருக்குத் தெரியாது ஏன்? எனது குருநாதர் அவர்கள் கூட இன்றுவரை அறிந்திருக்க மாட்டார்கள்?'

அன்பர் செ. தனபாலசிங்கன் அவர்கள் கூறிய ஒரு கூற்றைப் பார்ப்போம்.

"கடலும் கறையானும் காலமும் இரைகொண்ட முத்தமிழ்க் காப்பியங்களை மீட்டும் அளித்ததால் மட்டும் அன்றி ஜகந்நாதன் என்னும் தமிழ் நாதனைத் தலைமாணுக்கனுகப் பெற்றதாலும் பெருமைக்கு உரியவரானுர் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் ஆம்! கி. வா. ஜ அவர்கள் நடமாடும் இலக்கிய களஞ்சியம். ஜகந்நாதன் என்ற திருவாளன் தமிழ்நாடுகண்ட பெருவாழ்வு"

கி. வா. ஜ அவர்களுடைய எழுத்தில் அருள் மணம்வீசிக் கொண்டே இருக்கும். பேச்சில் கல்நெஞ்சையும் உருக்கும் கனிவு தோன்றிக் கொண்டே இருக்கும். சிலேடையாகக் கூறுவதிலும் குறைவில்லாதவர். அவரது சிலேடைப்பேச்சுக்கள் இலக்கிய ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமையும். கிழக்குவானில் ஜனித்த சூரியன் போன்றும் சந்திரன் போன்றும் கி. வா. ஜ. அவர்களுடைய புகழ் நின்றுநிலவுமாக.

# இலங்கையர்க்கும் இனியவர்

# கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜ.

அமரர் கி. வா. ஜகந்நாதன் பழந்தமிழ்க் கல்வி மரபிலே தோய்ந்த ஒருவர் அதே வேளை, புதிய தமிழ்க் கலைவடிவங்களாகிய சிறுகதை கட்டுரை என்பவற்றிலும் ஈடுபாடு கொண்டவர். தமிழகமெங்கும் பேருரைகள் நிகழ்த்தியும், பெருந்தொகையான புத்தகங்களை வெளியிட்டும் அறிவொளி பரப்பியவர். இந்த நூற்றுண்டின் தமிழிலக்கியக் கல்வி வரலாற்றிலே தமது முத்திரையைத் திண்ணமாகப் பதித்தவர் 'கலைமகள்' திங்கள் ஏட்டின் ஆசிரியராக அமர்ந்து அவர் நெடுங்காலம் பணியாற்ற வாய்ந்தமை, தமிழர்கள் பெற்ற பெரும்பேறு எனவே கொள்ளுதல் வேண்டும்

தமிழ்கூறும்நல்லுலகம் முழுவதிலும் சென்று செறிந்த அவரது பணிகளின் பயன்கள், இலங்கையர்களாகிய எங்களுக்கும் பெரிதும் உதவின அவைகளை நினைவுகூர்ந்து நன்றி பாராட்டுவது அவசியமாகும்.

அவ்வாறு நன்றி பாராட்ட முற்படுகையில் அவர் என்னுடன் கொண்டிருந்த நினைவலைகளாய் என் மனத்திலே தோன்றுகின்றன. நான் பள்ளி மாணவனுய் இருந்த காலந்தொட்டே 'கலைமகளுக்கு' என் கவிதைகளை அனுப்பத் தொடங்கி விட்டேன். அப்பொழுது தொடக்கமே அறிஞர் கி. வா. ஜ. சிறு சிறு கடிதங்களை எனக்கு எழுதத் தொடங்கியிருந்தார் என் பாட்டுகள் பற்றித்தமது கருத்துகளை எழுதி உதவினுர்; ஆலோசனைகளைத் தெரிவித்தார். இவ்வாருன கடிதத் தொடர்பு 1952 ஆம் ஆண்டளவிலே தொடங்கிற்று.

பின்னர் 1956 ஆம் ஆண்டில் எனது கவிதையொன்று 'கலைமகளில்' வெளியாயிற்று சித்திரங்கள் சூழ நேர்த்தியாக அது பிரசுரமாயிற்று அதன் பின் என் பாட்டுகள் பல 'கலைமகளில்' அடிக்கடி வரத் தொடங்கின. குறிப்பாக ஐம்பதுகளின் பிற்பாதியிலும் அறுபதுகளின் தொடக்கத்திலும் நிறைய எழுதக்கூடிய சூழ்நிலை எனக்குக் வாய்த்தது கி. வா. ஜ. அவர்களும்எனதுபாட்டுகளைவிரும்பி வரவேற்றுப் பிரசுரித்தார். இவ்வாறு அவர் பிரசுரஞ் செய்தது எனக்கு மட்டுமன்றி இங்குள்ளஏனைய இலக்கிய நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் பெருமைதருவதாய் இருந்தது.

ஒரு சமயம், இலங்கை வானொலியாரின் வேண்டுகோட்படி 'வந்து சேர்ந்தன' என்னும் ஒரு கவிதை நாடகத்தை எழுதித் தந்தேன் ஏனோ தெரியாது. வானொலிக்காரர்கள் அதை ஒலிபரப்பாது தவிர்த்து விட்டனர். அதே நாடகத்தை அறிஞர் கி.வா.ஜ. அவர்கள் பரிசீலனை செய்து முற்றுமுழுவதாக ஒரு 'கலைமகள்' இதழில் பிரசுரித்துதவினுர்.

இந்த நாடகம் பிரசுரமாகிய பின்னர்தான் அவரை முதன்முதலாகச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று மிகவும் கலகலப்பாகவும் அன்புடனும் உரிமையுடனும் பழகும் அவருடைய பண்பினை உணர்ந்து கொண்டேன்.

"நவில்தொறும் நூல் நயம் போலும், பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு" என்ருர் வள்ளுவர் பண்புடையாளராகிய கி வா. ஜ அவர்களின் தொடர்பு நூல் நயம் 'போல' மட்டும் இருக்கவில்லை நூல்நயம் 'ஆகவும்' இருந்தது

முதற் சந்திப்பின் பின் அவர் இலங்கை வரும் தருணங்களில் எல்லாம் நாம் சந்திப்பதுண்டு. இந்தியாவிலும் இரண்டு தடவைகள் நான் அவருடைய வீடாகிய 'காந்தமலைக்குச்' சென்றதுண்டு.

கடிதங்களையும் நாம் அவ்வப்போது பரிமாறிக்கொள்வதுண்டு. சிலவேளைகளில் நமது கடிதங்கள் பாட்டாகவும் அமையும்.

கி. வா. ஜ. அவர்கள் என் கட்டுரை, நாடகம், கவிதைகளைத் தமது கலை ஏடாகிய 'கலைமகளில்' வெளியிட்டமைக்கு அவர் என்மீது கொண்ட தனிப்பட்ட அன்பு காரணமாகாது. உயரிய தரமுடைய படைப்புகள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை வரவேற்கும் பரந்துபட்ட பண்பாடு அவருடையது கவிதைத் துறையிலே, "மஹாகவி" என்னும் புனைபெயர் பூண்டவராகிய நமது து. ருத்திரமூர்த்தி, நீலாவணன், மு. சடாட்சரன், இராஜ அரியரத்தினம் ஆகியோரின் ஆக்கங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். கதைகளைப் பொறுக்கவரையில். சம்பந்தன், இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம், அருள் செல்வநாயகம், எஸ். பொன்னுத்துரை, தெளிவத்தை ஜோசப் முதலியவர்களின் படைப்புகளைக் கி. வா. ஜ. வரவேற்று வெளியிட்டுள்ளார்.

**முருகையன்**

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கி லஹ்மணன், சொக்கன் முதலியவர்கள் எழுதிய கட்டுரைகளும் 'கலைமகளில்' வெளியாகியுள்ளன.

முதலிலே 'கலைமகள்' வாயிலாக ஏற்பட்ட இலக்கியத் தொடர்பு, பின்னர் அவர் இங்குவந்து பேருரைகள் நிகழ்த்துவதற்கும் அபிமானிகள் பலரை ஈட்டிக்கொள்வதற்கும் ஏதுவாயிற்று.

பண்டிதமணி சி கணபதிப்பிள்ளைமீது பெருமதிப்புப்பூண்டிருந்தார் கி. வா ஜ பண்டிதமணி கடுமையான கண்டனக்காரர். நாவலர் வரலாறு தொடர்பான சில பிரச்சனைகள் தோன்றியபோது, கி.வ. ஜ. அவர்களின் ஆசானுகிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களைப் பண்டிதமணி தாக்கி எழுதியுள்ளார். அவ்வாறிருந்தும் கி. வா. ஜ. பண்டிதமணிபால் அன்பு பாராட்டினுர்.

நீர்வேலி சு. இராசேந்திரக் குருக்களிடமும் கி. வா. ஜ. நிரம்பிய வாரப்பாடு உடையவர்.

உரும்பிராய் செ. தனபாலசிங்கன், சமயக் கட்டுரை நூல்கள் சிலவற்றின் ஆசிரியர்; சமயச் சொற்பொழிவாளர், தனபாலசிங்கன் மீதும் கி. வா. ஜ. மிகுந்த பரிவுடையவர்

இவர்களோடுகூட, இலங்கையர்களான முதலியார் குல சபாநாதன், சோ. சிவபாதசுந்தரம், வீ. சுந்தரலிங்கம், கனகசெந்திநாதன், சில்லையூர் செல்வராசன் ஆகியோரும் இன்னும் பலநம் கி. வா. ஜ. அவர்களின் அன்புரிமைக்குப் பாத்திரமானவர்கள்.

தமது அன்புக்குரியார் எழுதுவன யாவற்றையும் 'கலைமகளிலே' கி வா. ஜ வெளியிட்டு விடுவார் என்று எதிர்பார்த்தல் இயலாது. மிகப் பல எழுத்தாளர்கள் அவருக்கு அபிமானிகளாய் இருந்தனர். அவர்களின் ஆக்கங்களையும் உரைத்துப் பார்த்துத் தரம்றிந்து, 'கலைமகளுக்கு' ஏற்றவற்றை மாத்திரமே தெரிந்தெடுத்து வெளியிட்டார். இதனுல் அவரது மதிப்பும் தகுதியும் பெரிதும் போற்றப்பட்டன.

ஏறத்தாழ இருபதாண்டுகளுக்கு முன் கி. வா. ஜ. அவர்களுக்கு அறுபதாண்டு பூர்த்தியாயிற்று அந்தவேளையிலே அவரது தாயகமாகிய தென்நாட்டில் மட்டுமன்றி இலங்கையின் பல்வேறு இடங்களிலும் கி. வா ஜ. மணி விழா ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது. கி. வா. ஜ அவர்களை நம்மவருள் ஒருவராகவே நாம்கருதிப்போற்றினேம். இவ்வாறு கொள்வதற்கு அவருடைய ஆழ்ந்த அறிவும் நாவன்மையுமே காரணமாயின.

கி. வ. ஜ. அவர்களின் சொற்பெருக்கு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெருவிருந்தாகும். எளிமையான, பருமையான நுலமான) எடுத்துக்காட்டுகளையும் உதாரணக் கதைகளையும் கொண்டும் அதே வேளை நுண்மையான (சூக்குமமான) தத்துவங்களையும் அவர் சுளுவாகச் சொல்லி விடுவார். அதனுல் கற்றோரும் மற்றோரும் கவர்ந்து இழுக்கப்பட்டனர்.

பரந்துபட்ட மக்கள் கூட்டமொன்றுக்குப் பயன்பட்ட அறிஞர் கி. வா. ஜ.

இலங்கையுடன் அவர் கொண்ட தொடர்பு ஆழ்ந்து ஆய்ந்து அறியப்படத்தக்க



திரு. கி. வா. ஜகந்நாதன் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியபோது மில்க்வைற் அதிபர் க. கனகராசா, டாக்டர் சிவயோகம் ஸ்ரீஸ்கந்தராஜா, நீர்வேலி இராசேந்திரக் குருக்கள், அண்ணுகோப்பி நடராஜா ஆகியோர்மலர் மாலை சூட்டி வரவேற்றபோது எடுக்கப்பட்டது.

(படம்: எஸ். கதிரவேலு)

# செய்தி விவரணக் கட்டுரை

# 'ஸ்கூப்ஸ்' செய்தி எவ்வாறு உருவாகிறது?

"ஸ்கூப்ஸ்" என பத்திரிகை வட்டாரங்களில், பிரத்தியேக செய்திகளைக் குறிப்பிடுவார்கள். இந்த ஆங்கிலச் சொல்லின் பொருள், ஒரே அள்ளாக அள்ளுதல், என்பதாகும். ஒரு பத்திரிகையின் பொக்கிஷமாக விளங்குபவை ஸ்கூப்ஸ். இவைகள் எங்கே கிடைக்கும் என்று நிருபர்கள் கனவிலும், நனவிலும் சதா ஏங்கித் தவிப்பார்கள். ஒரு "றிப்போட்டர்" எத்தனை ஸ்கூப்ஸ் பெற்றுத் தமது பத்திரிகைக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவை எவ்வளவு முக்கியமானவையோ, அவற்றைப் பொறுத்துத்தான் அவருடைய எதிர்காலம் பிரகாசிக்கும், புகழ் பெருகும்.

### "ஸ்கூப்ஸ்" பலவகை

ஸ்கூப்ஸ் பலவகைப்படும். இந்தியாவின் இந்து பத்திரிகை, போபர்ஸ் ஆவணங்களைப் படம்பிடித்துப் பிரசுரித்தது அல்லவா? அவை ஸ்கூப்ஸ் வகையில் உச்ச இனத்தைச் சேர்ந்தவை. சிறு, சிறு ஸ்கூப்ஸ் பற்றிச் சனங்கள் அது வெளிவரும் நாள் பரபரப்பாகப் பேசுவர் மறுநாள் அதனை மறந்துவிடுவார்கள்.

ஒரு நிருபரின் கூர்மையான அவதானம், சிறிய சிறிய அறிகுறிகள் போலும் சம்பவங்களை விடாப்பிடியாகத் துரத்து செல்லல், தகவல் தரவல்லோரின் நட்பு, நம்பிக்கையைச் சம்பாதித்துப் பேணி வருதல்— இவற்றின் விளைவாகவே ஸ்கூபஸ் கிடைப்பது உண்டு.

பெரும்பாலும் ஸ்கூப்ஸ் எனும் பிரத்தியேக செய்திகளுக்கு உள்நோக்கம் உண்டு. எனவே அவை உண்மையானவை, பொதுமக்களுக்கு நன்மையானவை என்றால் மட்டுமே வெளியிடப்பெற வேண்டியன ஆகும். அதுவும் இயன்றளவு முழுமையாக ஊர்ஜிதமான பின்னரே அவை பிரசுரமாதல் வேண்டும் எந்தக் 'குட்டி' றிப்போட்டரும் தமது பத்திரிகை வாழ்க்கையில் மிக விரைவாகவே இதனைக் கற்றுக் கொண்டிருப்பார்.

அநேகமாக, இத்தகைய ஸ்கூப்ஸ் செய்திகளைத் தருவோர் யார் என்பது ஒரு போதும் வெளிவரல் ஆகாது. இத் தோற்றுவாய் அந்தரங்கமாக வைக்கப்படுதல் வேண்டும். அது மாத்திரமன்றி, இந்த அந்தரங்கம் என்றும் பேணப்பட்டுவருதலும் முக்கியமாகும். சில வேளைகளில் இத்தகைய செய்திகள் தாமாகவே பத்திரிகையைத் தேடி வருவதும் உண்டு. அப்போதெல்லாம், செய்தி மெய்தானா? என்பதை நன்றாக உறுதி செய்துகொள்ளும் பொறுப்பு, அப் பத்திரிகை நிறுவனச் செய்தியாளர்களுக்கு இரட்டிப்பு மடங்கானது ஆகும்.

### இந்தியன் எக்ஸ்பிறஸ் ஸ்கூப்ஸ் செய்தி

"இந்தியன் எக்ஸ்பிறெஸ்" தினசரி அண்மையில் ஒரு ஸ்கூப் செய்திக்கு முக்கியத்துவம் அளித்திருந்தது. அது ஏதோ நாட்டை உலுக்கும் செய்தியல்ல ஆயினும், சுவாரஸ்யமானதாக இருந்தது. "த கொன்ஸ்பிறேட்டர் அஸ் றெஃவ்றீ" (சதிகாரனே மத்தியஸ்தரானார்) எனும் தலைப்பின் கீழ் அது ஜூலை 10 ஆம் தேதிய இதழில் வெளியாயிற்று. ஒரு தொலைபேசிச் சம்பாஷணை பற்றியதே செய்தி.

ஜனதா கட்சித் தலைவர் அஜித் சிங், தொலைபேசியில் எச். டி. தேவ் கௌடாவுடன் நடத்திய தொலைபேசிச் சம்பாஷணை அது. கர்நாடக மாநிலத்தில் ஜனதா தலைவர் கௌடா, கட்சி அதிருப்தியாளர்களில் முக்கியமானவர். புதுடில்லி "டேற்லைன்" இடப்பட்டு, "மத்திய அரசு வட்டாரங்களை" ஆதாரம்காட்டி, உரையாடலின் சில பகுதிகளை அந்தப்படியே அவ்வறிக்கை வெளியிட்டு இருந்தது.

இத் தொலைபேசி உரையாடல் பற்றிய ஜூலை 10 ஆம் திகதிய அறிக்கை, சில காலமாக நிலவிய ஒரு குற்றச்சாட்டிற்கு ஆதாரமானது போல அமைந்து இருந்தது "த ஏக்ஸ்பிறஸ்" பத்திரிகை எடுத்துக் கூறிவந்த குற்றச்சாட்டு அது; அஜித் சிங்கும், சந்திரசேகரும் ஒன்று சேர்ந்து, கர்நாடக மாநிலத்திலுள்ள ஜனதா கட்சி அதிருப்தியாளர்களுக்கு உற்சாகம் ஊட்டிவருகின்றனர். கர்நாடக முதலமைச்சராக இருந்தவர் இராமகிருஷ்ண ஹெக்டே அம் மாநிலத்தில் அவருக்குச் சிக்கல்களை ஏற்படுத்தி, தொல்லை கொடுத்துக் கொண்டே இருங்கள். இந்த வகையாகத்தான் அவ் விருவரும் தைரியமூட்டினர் "எக்ஸ்பிறெ"ஸின் குற்றச்சாட்டு இதுவே.

எனவே, எக்ஸ்பிறெஸ் ஜூலை 13 ஆம் திகதியன்று ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு குதூகலித்தது: வார்த்தைக்கு வார்த்தை நடந்தேறியது என்று கூறப்பட்ட தொலைபேசிச் சம்பாஷணை மெய்யானது தானா? இப்படி, உரையாடிய இருவரில் ஒருவராவது திரு. அஜித் சிங்கோ, திரு. எச். டி. தேவ் கௌடாவோ வினா எழுப்பவில்லையே?

### பல வகை விமர்சனங்கள்

தொலைபேசி அறிக்கையைத் தொடர்ந்து பல விமர்சனங்கள் எழுந்தன. அது எதிர்பார்க்கப்பட்டதே. ஜனதாவின் ஒரு சாரார் அதிர்ச்சி தெரிவித்தனர். வேறு சிலர், ஜனதா அதிருப்தியாளர்கள் ஹெக்டே ஒட்டுக் கேட்டார் எனக் குற்றஞ் சாட்டினார்கள் அரசின "ஸ்பெஷல் பிறாஞ்ச்" சினைத்துணைக்கொண்டு தமது எதிராளிகளின் தொலைபேசி உரையாடல்களை இப்படி ஒட்டுக்கேட்டார் என்றனர் அவர்கள்.

இவ்விவாதவேளை, ஹெக்டே: 'ஒட்டுக்கேட்டலா? உண்மை. என்னையும்தான் ஒட்டுகேட்கிறார்கள். அடிக்கடி இது நடக்கிறது. முறையிட்டுப் பார்த்தேன். பயனே இல்லை" என்று கூறிவைத்தார்.

ஒட்டுக்கேட்டலால் பாதிப்பு அடைந்த அரசியல் வாதிகளையும் ஏனையோரையும் ஒருபுறம் விட்டுவிடுவோம். அறிக்கை வெளியிட்டு ஒரு கிழமை கடந்தும், மத்திய அரசு மட்டத்திலாகட்டும், மாநில மட்டத்திலாகட்டும் அரசின் ஒட்டுக்கேட்கும் அணியடுக்குகளின் நல்லொழுக்கம் பற்றி விமர்சிப்பது பொருத்தமானது என எக்ஸ்பிறெஸ் எண்ணவில்லை. இது வியப்புத் தருகிறது. ஏன்?

சம்பவம் மெய்யானதா? அதனை ஊர்ஜிதம் செய்துகொண்ட பின்பு, அச்சிடுவது ஒன்று. ஆனால் பாரதூரமான கிறிமினல் அல்லது பிறகுற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகாது பிரஜை ஒருவரது தொலைபேசியைச் சட்டவிரோதமாக ஒட்டுக்கேட்டல்பற்றி மௌனம் சாதித்தல் வேறொன்று இந்த மௌனம்தான் வியப்பூட்டுகிறது.

### உரிமை மீறல்

ஒரு பிரஜையின் உரிமைகள் மீறப்படுகின்றன. அது கண்டு மக்களின் நலலொழுக்க உணர்வுகள் புண்படுகின்றன. அவர்கள் கோப ஆவேசம் கொள்வர், காலம் கடந்து செல்லச் செல்ல, இக் கோபாவேசம் மழுங்கிப் போகிறது, இதை யிட்டுப் பத்திரிகைகள் முறையிடுவது அடிக்கடி எமது காதில் விழுகிறது.

இருப்பினும், இச் செய்தித் தாள்கள், குடியியல் உரிமைகள்பற்றிய வாத விவாதங்களில் இறங்கி குரல்கொடுக்கின்றன. தபால் மசோதா இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். "போஸ்ரல் பில்" இன்னமும் சட்டம் ஆகவில்லை. காருண்ய வசமாக ஜனாதிபதியின் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை. இந்திய ஜனாதிபதியின் அங்கீகாரம் வழங்கப்பட்டதும் அது சட்டம் ஆகும் ஒருகால் அது சட்டம் ஆகிவிட்டதோ, பிரஜைகள் தமக்குள் தொலைபேசி உரையாடலில் ஈடுபடும் போது, அதனை அரசாங்கம் ஒட்டுக்கேட்பது முன்னரை விடச் சுலபம். ஆக, பத்திரிகைகள் அனைத்துமே, இத்தபால் மசோதாவை எதிர்த்துநின்று ஏகோபித்த கோஷமாகக் கண்டனம் தெரிவித்து வந்தமை மனத்தெம்பு ஊட்டியது.

### பத்திரிகா தர்மம்

இதில் பரிதாபம் என்னவென்றால், எக்ஸ்பிறஸ் பத்திரிகை இந்தக் குட்டி 'ஸ்கூப்'பையும் வைத்து இருந்திருக்கலாம். அதேவேளை பத்திரிகா தர்மத்துக்கு விசுவாசமாகவும் நடந்துகொண்டு இருந்திருக்கலாம் அப்பத்திரிகை இப் பிரத்தியேக செய்தியின் தோற்றுவாயைக் கண்டித்து இருந்தால் அவ் விசுவாசம் பேணப்பட்டிருக்கும். ஒரு சமயம் அப்படியான கண்டனம் சங்கடமானதாக இருந்திருக்கும். அப்பேர்ப்பட்ட விலங்கம் நேரும்பட்சத்தில், பிரத்தியேக செய்தியையே கைவிடத் துணிதல் (தீர்மானித்தல்) சிலாக்கியமானதாக இருந்திருக்கும்.

ஒரே விதமான தவறுக்காக, ஒரு சிலரை மட்டும் கண்டித்தல் பத்திரிகையின் நன்னோக்கத்திற்கு நல்லதல்ல.

......12ஆம் பக்கம் பார்க்க

# கலாநிதி இ. பாலசுந்தரத்தின் இடப்பெயர் ஆய்வு

## காங்கேசன் கல்வி வட்டாரம்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

இடப்பெயர் ஆய்வு ஒழுங்கான முறையிலே மேற்கொண்டால், அது சுவையும் பயனுமுடைத்து. சிலர் தங்கள் மனம்போன போக்குக்குஇடப்பெயர்களுக்கு விளக்கங் கொடுப்பதுண்டு. இடப்பெயர்களை முறையாக ஆய்வு செய்யும் ஒருவருக்கு வரலாறு, பண்பாடு, புவியியல், சமூகவியல், மொழியியல் ஆகியன பற்றிச் சிறிதளவாவது விளக்கம் வேண்டும். இவ்வாய்வாளருக்கு நாட்டாரியல் அடிப்படைகள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். கலாநிதி இ. பாலசுந்தரம் நாட்டாரியலிலே ஆய்வு மேற்கொண்டு உயர்பட்டம் பெற்றவர் அத்தகைய ஒருவர் இடப்பெயர் ஆய்வு மேற்கொள்வது பொருத்தமானதே. அவர் காங்கேசன் கல்வி வட்டாரத்துள் அடங்கிய இடப்பெயர்களை ஆய்வுசெய்து இந்நூலிலே தன் விளக்கங்களைக் கொடுக்கிறார். இந்நூல் பண்டிதர் சி. அப்புத்துரை மணிவிழா வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

எழுபது பக்கங்கள்கொண்ட இந்நூலுக்குப் பதிப்புக் குழுவினர் சர்ச்சைக்குரிய ஒரு பதிப்புரை எழுதியுள்ளனர். இப்பதிப்புரையிலே ஈழத்து இடப்பெயர் ஆய்வுகளிலே முக்கியமாக இடம்பெறவேண்டிய எட்டுக் காரணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன:

1. ஈழத்தில் மூலத்திராவிடர் தொல்குடிகளாக வாழ்ந்தமை, 2 ஈழ – தமிழகத் தொடர்பு, 3. தமிழகத்திலிருந்து காலத்துக்குக் காலம் நடைபெற்ற தமிழர் குடியேற்றம், 4. தமிழ், சிங்களம் ஆகியவற்றில் வட இந்திய மொழிகளின் செல்வாக்கு, 5. சிங்கள அரசரின் குறுகிய கால ஆட்சிகள், 6. சிங்கள அரசருக்கும் ஈழத்தமிழக அரசுக்குமிடையே நிலவிய தொடர்பு, 7. சிங்களமொழி, பண்பாட்டு உருவாக்கத்தில் தமிழ், தமிழர் செல்வாக்கு, 8. ஈழத்தில் இந்திய அரசுகளின் ஆட்சி. இக்காரணிகள் அனைத்தையும் வரலாற்று அடிப்படையிலே ஆராய்ந்தே ஈழத்து இடப்பெயர் வரலாறு எழுதப்படவேண்டும் எனப் பதிப்புக் குழுவினர் பொருத்தமாகக் கூறியுள்ளனர். ஈழத்து இடப்பெயர் பற்றிய முழுமையான ஆய்வு வெளியிடப்படும்பொழுது இக்காரணிகள் நிச்சயமாக ஆய்வாளர்களாலே மனங்கொள்ளப்பட வேண்டியன. மிகக் குறுகிய இடப்பரப்பிலுள்ள இடப்பெயர்களை ஆய்வு செய்யும் நூல் இக்காரணிகள் எல்லாவற்றையும் கருத்திலே கொண்டிருக்க முடியாது. எனினும் சில காரணிகளை ஆசிரியர் மனங்கொண்டிருப்பதை இந்நூலிலே அவதானிக்க முடிகின்றது.

இடப்பெயர்களை நீர்நிலைப் பெயர்கள், நிலவியல்பு குறித்த பெயர்கள், நிலப் பண்பாட்டு நிலைப்பெயர்கள், குடியிருப்பு நிலைப் பெயர்கள், ஊராட்சி நிலைப் பெயர்கள், தாவரப் பெயர்கள் சுட்டிய இடங்கள், சிறப்பு நிலைப்பெயர்கள் என்னும் ஏழு வகைகளாக வகைப்படுத்தி ஆசிரியர் ஆராய்கின்றார். குழுநிலை தொழில் ஆகியனவற்றின் அடிப்படையிலும் இடப்பெயர்களை நோக்கலாம் என்பதையும் இவ்விடத்திலே சுட்டிச்செல்ல விரும்புகிறேன்.

'சித்திரமேழி' என்னும் இடப்பெயர்பற்றி விளக்கந் தருமிடத்து தமிழகத்திற்குச் சித்திரமேழி மக்கள் இங்கு வந்து குடியேறியதால் அப்பெயர் இங்கு ஏற்பட்டிருக்கலாமென ஆசிரியர் அபிப்பிராயப் படுகிறார். "சித்திரமேழிப் பெரிய நாட்டார்" என்னுந்தொடர் தென்னிந்தியக் கல்வெட்டுக்களிலே இடம் பெறுவதையும், குறிப்பாக, பிரான்மலை என்ற இடத்திலுள்ள ஒரு கல்வெட்டுசித்திரமேழியினரைக் குறிப்பிடுவதையும் எடுத்துக்காட்டும் ஆசிரியர் "யாழ். மாவட்டத்தில் பிரான்பற்று, சித்திரமேழி என்ற இரு இடங்களும் ஒரே பகுதியில் அமைந்த அண்மைக் கிராமங்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. எனவே சித்திரமேழிப் பெரியநாட்டவரே இங்கு வந்து குடியேறினர் என்ற ஊகம் மேலும் வலுப்பெறுகிறது" என்று கூறுகின்றார்.

யாழ். மாவட்டத்து இடப்பெயர்கள் பல ஹோர்ஸ்பரோ, குமாரசாமி போன்றோர்களால் ஆராயப்பட்டுள்ளன. இவர்கள் சில பெயர்களுக்குச் சிங்களமூலம் கண்டுள்ளனர். இந் நூலாசிரியர் அவற்றைத்தக்க முறையிலே மறுத்துத் தன்னுடைய கருத்தை நிலைநாட்டுகிறார். வலிகாமம் என்ற பெயர் சிங்கள weligama என்பதன்திரிபே என்று முன்னர் கொள்ளப்பட்டது இதற்கு ஆசிரியர் "வலிகாமம் என்பதற்கு அதன் நில அமைப்பே முதற்காரணியாகிறது. வலி மணல் என்ற சிங்களப்பொருள் கொளின் இப்பகுதியில் பெரும்பாலும் செம்பாட்டுத்தரையே காணப்படுகிறது. மணல்தரையைச் செம்பாட்டுத் தரையாக்க முடியாது; செம்பாட்டுத்தரை மணல் தரையாகவும் மாறாது" என்று கூறுவதுடன் வலியகமம்' என்ற தொடரே வலிகாமம் ஆயிற்று என்றும், தமிழ் நாட்டில் வலிதாயம், வலிவலம், வல்லம், வல்லன் சேரி, வல்லப்பாக்கம், வல்லபுரம் முதலாய இடப்பெயர்கள் இருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

### நூலகம்

கீரிமலை, கம்பர்மலை, சுதுமலை போன்ற இடப்பெயர்கள் பற்றிக் கூறுமிடத்து யாழ்ப்பாண மாவட்டத்திலே மலைகள் இல்லாத காரணத்தால் மலைஎன்ற ஈறு கொண்ட இப் பெயர்கள் "கற்பனை அடிப்படையிலோ அல்லது வேறு சொற்களின் திரிபாகவோ தோன்றியிருக்க வேண்டும்" என்றுகூறுகிறார் உயர்ந்த இடத்தினைக் குறிக்க மலை என்ற சொல் திட்டி, பிட்டி, திடர், மேடு போன்ற சொற்களுக்குப் பதிலாகக் கையாளப பட்டதோ என்பது ஆராயப்படவேண்டியதாகும். பண்டைத்தமிழ் இலக்கியங்களிலே மலை என்னுஞ் சொல் ஆளப்பட்டுள்ளமை நுணுகி நோக்கவேண்டியதொன்றாகும். கீரிமலை கடற்கரையோரமாயிருந்தபோது கடல் மட்டத்திலிருந்து உயரமாயிருப்பதாக புவிவெளி உருவவியல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்துக்கு 'மணற்றிடர்' என்று இன்னொரு பெயரும் உண்டு இவற்றையெல்லாம் கருத்திற்

— 12 ஆம் பக்கம் பார்க்க

## பல இனமொழிகள் தமிழில் ஊடுருவல்

| | | |
|---|---|---|
| கந்தோர் | — | ஒல்லாந்தர் சொல் |
| விருந்தை | — | போர்த்துக்கேயர் சொல் |
| பொலிஸ் | — | லத்தீன் சொல் |
| கைது | — | உருதுச் சொல் |
| ஆசாமி | — | இந்தியச் சொல் |
| இலாகா | — | அராபியச் சொல் |
| வில்லங்கம் | — | மராட்டிச் சொல் |
| பீரோ | — | பிரஞ்சுக்காரர் சொல் |
| சதுரகம் | — | பாளிச் சொல் |
| சர்க்கார் | — | பாரசீகச் சொல் |
| துரதிர்ஷ்டம் | — | சமஸ்கிருதம் சொல் |

தொகுப்பு
கனகரட்ணம் ஹேமலதா

## மாதுளையின் மகிமையே மகிமை

மாதுளம் பழத்தின் மகிமை சாதாரணமானது அல்ல. அதன் மகிமையே மகிமை! அந்தப் பழத்திற்குரிய அருங்குணங்களை கீழே படியுங்கள்

உமிழ் நீரைச் சுரக்க வைக்கும் வாய் நாற்றத்தைப் போக்கும், சீரணத்தை ஒழுங்காக்கும், எளிதில் சீரணிக்கும், வயிற்றுப் புண்ணை நீக்கும், மூத்திர எரிவை நீக்கும், அன்ன தோஷத்தை நீக்கும், பேதியை நிறுத்தும், இருமலை ஒழிக்கும், மார்பு வலியை நீக்கும், வயிற்றுக் கனத்தை நீக்கும், இருதயத்திற்கு பலம் தரும், தொண்டை கட்டுதலை நீக்கும், வியர்வை நாற்றத்தை நீக்கும், தோலை மென்மையாக்கும், ஆண்மையைப் பெருக்கும், பெண்மை அதிகரிக்கும், பெண்கள் மாதவிடாய் நாட்களிலும் உண்ணலாம், வலியின் கஷ்டம் குறையும், மூலஎரிவை நீக்கும் நீரிழிவைக் குணமாக்கும், ஆஸ்த்துமாவை நீக்கும், மாரடைப்பை நீக்கும், வாய்வுப் பிடிப்பு ஏற்படாது, விந்துவைக் கட்டும், முகம் அழகாகும். சீத பேதியைக்குணமாக்கும், பயத்தன்மையை அகற்றும். தொண்டைக்கம்மல் நீங்கும், இரத்தத்தை சுத்தியாக்கும், இரத்தச் சோகையை நீக்கும், பாண்டு ரோகத்தை தணிக்கும், பித்தப்பாண்டு நோயைக் குண மாக்கும், பெரு வயிற்றைக் குறைக்கும்.

மாதுளம் பழத்தைக் கண்ட கண்டநேரத்தில் உண்ணக் கூடாது அப்படி உண்டால் பெரிய பலன் கிடைக்காது.

மாதுளம் பழத்தை முறையுடன் உண்டால் உடலில் நோய்கள் நீங்கி, நீடித்த ஆயுளும் உண்டாகும்.

நன்றி: மாதுளை இதழ்

## உலகில் மிகப் பெரியவை

| | | |
|---|---|---|
| (1) கண்டம் | — | ஆசியா |
| (2) சமுத்திரம் | -- | பசுபிக் |
| (3) சமுத்திரம்(நீளம்) | — | அத்திலாந்திக் |
| (4) மலை (உயரம்) | — | இமயமலை |
| (5) மலை(நீளம்) | — | அந்தீஸ் |
| (6) சிகரம் | — | எவரெஸ்ட் |
| (7) தீவு | — | கிறீன்லாந்து |
| (8) தீவுத்தொகுதி | — | இந்தோனேசியா |
| (9) ஆறு | — | அமேசன் |
| (10) கடல் | — | மத்தியதரைக்கடல் |
| (11) நதி | — | நைல் |
| (12) குடாநாடு | — | அரேபியா |
| (13) நாடு (பரப்பளவு) | — | ரஷ்யா |
| (14) நாடு(சனத்தொகை) | — | சீனு |
| (15) நகரம் (பரப்பளவு) | — | லண்டன் |
| (16) பாலைவனம் | — | சகாரா |
| (17) ஏரி | — | கஸ்பியன் |
| (18) எரிமலை (உயரம்) | — | குவலாத்திரி |
| (19) எரிமலை (பரப்பளவு) | — | மோனலோவா |
| (20) நீர்வீழ்ச்சி | — | ஏன்ஜெல் |
| (21) நன்னீர்வாவி | — | சுப்பீரியா |
| (22) வாவி (உவர்நீர்) | — | கஸ்பியன்கடல் |
| (23) உயரத்தில் உள்ள நாடு | — | திபெத் |
| (24) நகரம் (சனத்தொகை) | — | டோக்கியோ |
| (25) உயரத்தில் உள்ள பட்டினம் | — | வென்சுவான் |

தொகுப்பு: இ. அனுரதன்

## பூஜைக்கு வேண்டிய மலர்கள்

சிவனுக்கு — கொன்றை, ஆத்தி, மந்தாரை, தாமரை.
பிள்ளையார் — வெட்சி.
முருகன் — கடம்பமலர், அலரி, தாமரை.
பார்வதி — நீலமலர்கள்.
சூரியன் — தாமரை.
சரஸ்வதி — வெண்தாமரை.
பெருமாளுக்கு (விஷ்ணு) — வெண்ணிறப் பூக்கள், தாமரை, துளசி, செண்பகம், செவ்வந்தி போன்ற எல்லாம்.
லட்சுமிக்கு — செந்தாமரை, விஷ்ணுவுக்கு உகந்த மற்றவை.

சாருஜன் இராமகிருஷ்ணன்




## உங்களுக்கு தெரியுமா?

### திதிகள் 16

பிரதமை, துதியை. திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி. அட்டமி. நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி பௌர்ணமி, அமாவாசை.

### கிரகங்கள் 9

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது.

### நட்சத்திரம் 27

அச்சுவினி, பரணி. கார்த்திகை, உரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை புனர்பூசம். பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அநுஷம், கேட்டை, மூலம், பூராடம். உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி ரேவதி.

### பருவங்கள் 6

இளவேனில், முதுவேனில், கார்காலம். குளிர் காலம். முன்பனிக்காலம், பின்பனிக்காலம்.

### மாதங்கள் 12

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி.

### நவதானியம் 9

நெல், கோதுமை, துவரை, உழுந்து. பயறு, மொச்சை கடலை, எள்ளு, கொள்ளு.

### நவரத்தினங்கள் 9

முத்து, பவளம், புஷ்பராகம், நீலம், மரகதம், மாணிக்கம், கோமேதகம், வைடூரியம், வைரம்.

### நவலோகங்கள் 9

பொன், இரும்பு, தாமிரம், ஈயம், வெள்ளி, துத்தநாகம். நாகம், கஞ்சம், பித்தளை.

**வைத்திய கலசம்**

## கோனரியா (மேகவெட்டை) பற்றிய முக்கிய தகவல்கள்

(டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B S (Cey)

★ இலங்கையிலும், உலகத்திலும் மிகவும் அதிகமானவர்களைப் பீடிக்கும் பாலியல் நோய் கொனரியா தான். கொனரியா (Gonorrhoea) நோயை மேக வெட்டை நோய் என்று தமிழில் கூறுவார்கள். எனினும் பல பாலியல் நோய்களின் தமிழ்ப்பெயர்களிடையே உள்ள குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக கொனரியா என்ற சொல்லையே பயன்படுத்தலாம்.

★ மிக விரைவில் தொற்றி, கடுமையான அறிகுறிகளுடன் வெளிப்படுவது இந்நோய். நோயுற்றவருடன் உடலுறவு வைத்த 2 – 5 நாட்களுக்குள் நோய்க்கான அறிகுறிகள் தோன்றிவிடும்.

★ ஆண்களில் நோயின் அறிகுறிகள் கடுமையாக இருக்கும் சிறுநீர்த் துவாரத்திலிருந்து. வெள்ளை அல்லது மெல்லிய மஞ்சள் நிறமான சீழ் போன்ற திரவம் வடியும். இதனால் உள்ளாடைகள் தானகவே ஈரலிப்பாகிவிடும். அத்துடன் சிறுநீர்த் துவாரத்தில் வேதனையும், கடுமையான சலக்கடுப்பும் உண்டாகும். அடிக்கடி சிறுநீர் கழிக்கவேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்தும்.

★ பெண்களில் அறிகுறிகள் அவ்வளவு கடுமையாக இருக்காது. சிறுநீர்த் துவாரத்தினூடாகவும். பிறப்பு வாயிலாலும் சிறிது சீழ் போன்ற திரவம் சுரக்கும். சலக்கடுப்பும், சிறுநீர் அடிக்கடி கழிக்கவேண்டும் என்ற உணர்வும் ஏற்படலாம். ஆயினும் பல தருணங்களில் இவ் அறிகுறிகள் நோயாளியின் கவனத்தை ஈர்க்காத அளவு இலேசாக இருக்கலாம் 60 – 65% பெண்களுக்கு எந்த அறிகுறியுமே இருக்காது. ஆண்களிலும் ஒரு சிலருக்கு நோய்க்கான அறிகுறிகள் வெளிப்படாது இருக்கலாம்.

★ அறிகுறிகள் அற்ற, அல்லது குறைவான அறிகுறிகளையே உள்ள நோயாளர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஏனெனில் இவர்கள் சிகிச்சை செய்வதை அலட்சியப்படுத்தி, நோயைப் பலருக்கும் பரப்பக் கூடும்.

★ கொனரியா நோயை பெனிசிலின் (Penicillin) ஊசி மருந்துமூலம், சுலபமாகவும், பூரணமாகவும் ஒரு சில தினங்களுக்குள் குணப்படுத்தலாம். பெனிசிலின் மருந்து ஒத்துக்கொள்ளாதவர்களுக்கு, வேறு பலவகை மாத்திரைகள் பயன்படுத்தப்படும்.

★ கர்ப்பிணிப் பெண்ணிற்கு கொனரியா நோய் இருந்தால், பிறக்கும் போது கிருமிகள் குழந்தையின் கண்களில் தொற்றி ஒரு வகை கண்நோயை (Opthalmra neonatorum) குழந்தைக்கு உண்டாக்கலாம். சரியான சிகிச்சை செய்யாவிடில் குழந்தை குருடாகவும் கூடும்.

★ மிகச் சில தருணங்களில் இந்நோய் ஆண்களிலும், பெண்களிலும் மலட்டுத் தன்மையை உண்டாக்கலாம். ஒருவகை மூட்டு வாதத்தையும் (Arthritis) இது சிலருக்கு உண்டாக்கும்.

★ முறைகேடான பாலியல் உறவு முறைகள் காரணமாகத் தொண்டை நோ (Pharyngitis), மலவாசலில் கிருமித்தொற்று, ஆகியவையும் உண்டாகலாம்.


★ இந்நோய் கொனகோகஸ் (Neisseria gonorrhoeae) என்ற பக்டீரியாக் கிருமியால்தான் உண்டாகிறது

★ நோயினால் சுரக்கும் சீழ் போன்ற திரவத்தை நிறமூட்டி. நுணுக்குக்காட்டி மூலம் ஆராய்வதன் மூலம், கிருமியை அடையாளம் கண்டு, நோயிருப்பதை நிச்சயம் பண்ணலாம்.

★ ஒரு பாலியல் நோயிருப்பவருக்கு வேறு சில பாலியல் நோய்களும் சேர்ந்து தொற்றிருப்பது பல தருணங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக கொனரியாவுடன், சிபிலிஸ்சும், ரைகோமோனியாசிஸ் நோயும் கலந்திருக்கக் கூடும். வைத்தியர்கள் இத்தகைய சாத்தியக் கூறுகளையும் மனதில் இருத்தியே வைத்தியம் செய்வார்கள்.

★ நோய்க்கான அறிகுறிகள் இருந்தால் மாத்திரமன்றி. நோய் தொற்றியிருப்பதற்கான சந்தர்ப்பங்கள் நேர்ந்திருந்தால் கூட வெட்கப்படாமல் வைத்தியரிடம் சென்று, மனந்திறந்து பேசி, சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

சிறுகதை




ஆராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

எனக்குக்கொழும்பில்உத்தியோகம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தேன் லீவில். திரும்பிப் போவதற்கு றெயில் இல்லை. என்ன காரணத்தினலோ தெரியாது. அந்த நேரம் பார்த்து இந்த பஸ் காரர்களும் ஓட்டத்தை நிற்பாட்டி விட்டார்கள். திரும்பிப் போக வழியில்லை.

இது ஒன்றும் எனக்கு அதிர்ச்சியைத் தரவில்லை இந்த நிலையும் ஓரளவிற்கு நான் எதிர்பார்த்தது தான். கொழும்பில் இருநது யாழ்ப்பாணம் நோக்கிப பிரயாணத்தைத் தொடங்கியபோது ஓராயிரம் பயங்கள் உள்ளத்தில் அலைமோதிக்கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று திருபபி வர வழி தெரியாமல் நின்று திண்டாடவேண்டியும் வரும் என்பது! அந்தப் பயம் நிஜமாகிவிட்டது.!

யாழ்ப்பாணம் வராமலே இருந்திருக்கலாம். என்ன செய்வது? குடும்பம் யாழ்ப்பாணத்தில்.

போக்குவரத்து வசதிகள் இல்லாததால் இந்த முறை தொடர்ந்து ஊரில் நிறக வேண்டியதாயாற்று. வெறும் உடல் மட்டும் தான் ஊரில் உள்ளம கொழும்பை நோக்கி அலைபாய்ந்துகொண்டிருந்தது.

கந்தோரில் என்ன நடக்கிறது? மேலதிகாரி கோபித்துக்கொள்கிருரோ? திட்டுகிருரோ?...... ஒருவேளை வக்கேஷன் நோட்டீஸ்.. சீச்சீ! அப்படிச் செய்யமாட்டார்! இதென்ன நான் வேண்டுமென்று நின்றேன்? இது எனது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம்! இதற்குப் போய் ஒருத்தன் மனிதாபிமானம் கூட இல்லாமல்.....

ஏன் நடவாது? எத்தனை பேருக்கு நடந்திருக்கிறது? அப்படி ஏதும் நடந்துவிட்டால்..? இந்த நினைவு ஏற்பட்டதும் அது மற்ற நினைவுகள் எல்லாவற்றையும் விரட்டிவிட்டு, உள்ளம் முழுக்க, உடல் முழுக்கத் தானேயாய் வியாபித்து நின்று வயிற்றில் புளி கரைக்கும்.

நான் யாழ்ப்பாணத்தில் நின்ற நாட்களில் எங்கள் ஊர் அம்மன் கோவிலில் திருவிழா நடந்துகொண்டிருநதது சின்ன வயதில் நான் நல்ல சைவப்பழம். தேவார திருவாசகம் நிறையப் பாடம். வெள்ளி, செவ்வாய் கோயில் தப்பாது.

படிதது, உத்தியோகமாகி, வெளியூர் சென்று விவாகமாகி தொல்லைகளும் அதிகரித்த பின்பு கொஞ்சம் அப்படி. இப்படித்தான்.

லீவில் நின்ற நாட்களில் ஒரு முறைகூடக் கோயிற் பக்கம எட்டிப்பார்க்காதவன், லீவு முடிந்து பயம் தொட்டதும் கோயில் பக்கம் போகத் தீர்மானித்தேன். கோயிலுக்குப் போய் வழிபாடு செய்தால் அலைபாயும் மனதிற்குச் சிறிது அமைதி கிடைக்கலாம், பொழுது போகும், அங்கு பலரைச் சந்தித்துப் பலவிதமான கதைகள் பேச, சில மணி நேரங்களாவது, உள்ளத்தை அரித்துக்கொண்டிருக்கும் கவலைகள் அடங்கியிருக்கும்.

எங்களூர் அம்மன் கோயில் பிரபல்யமானது. எங்கள் பக்கத்தில் மேளம், சின்னமேளம், சிகரம், சாத்துப்படி, சப்பரம், வாணவேடிக்கைகள் என்று படு விமரிசையாகத் திருவிழாக்கள் நடைபெறும். திருவிழாவுக்குத் திருவிழா இம்மியளவுகூட ஏற்றத் தாழ்வு இருக்காது முதல்நாள் காலை ஆறுமணிக்குத் தொடங்கும் திருவிழா அடுத்தநாள் காலை ஆறு மணிக்குத் தான் முடிவடையும் உடனே மறுநாள் திருவிழா ஆரம்பமாகும். அந்தப் பத்து நாட்களும் சனக் கூட்டம் கோயிலில் நிரம்பி வழியும் நாங்களும் இரவிரவாக மேளமும், சின்ன மேளமும் பார்த்துவிட்டு. அடுத்த நாள் பள்ளிக்குச் சென்று, தூங்கிவழிவோம். பின்பு ஆசிரியரது பிரப்பம்பழம் கிடைத்ததும் தெளிவோம்.

இது அந்தக் காலத்துக்கதை.

அன்று நான்கோயிலைச்சென்றடைந்த பொழுது மாலை நாலரை மணி இருக்கும். சனக்கூட்டம் பிழையில்லை. உள்ளே மேளச்சமா நடந்துகொண்டிருந்தது. விசேட மேளம் போலும். தவில்காரரும், நாதஸ்வரக்காரரும் அமர்க்களமாக வாசிததுக்கொண்டிருந்தனர்.

நான் உள்ளே சென்று வீதி வலம் வந்து வழிபாடு செய்துவிட்டு. கோபுர வாசலூடாக வெளிக்கொட்டகைக்கு வர நண்பன் சபா எதிர்ப் பட்டான்.

''மச்சான் மனேகர் வீட்டிலைதானே நிண்டனி, பகல் திருவிழாவுக்கே வந்திருக்கலாமே?'' என்று கேட்டான்.

'அப்படியானல் இது என்ன திருவிழா?'' என்று கேடடு நான் சிரித்தேன்.

''இது இராத் திருவிழா''!

''என்ன பகலில் இராத் திருவிழாவா? இன்னும் ஆறு மணி கூட ஆகேல்லை''

''இப்ப யாழ்ப்பாணத்திலை இப்பிடித்தான் திருவிழாக்கள்.''

''பகலிலை ராத்திருவிழா செய்யிறது!'' நான் சிரித்தேன்.

''மனேகர், இஞ்சை கொஞ்சக்காலம் திருவிழாக்களே செய்ய முடியாமலிருந்தது தெரியுமா உனக்கு.''

''நேரத்தோடை செய்யிறத்திலை தான் கோயிலடிலை சனம் நிக்குது. உண்மையான ராத்திருவிழா எண்டா விடியப்பறம் சுவாமி தூக்கக் கூட ஆளிருக்காது இந்தக் காலத்திலை!'' என்று நான் சிரித்தேன்.

''ஓம் மச்சான் இந்தக் காலத்திலை எல்லோரும் பிசி''.

இதற்கிடையில் சுவாமி உள்வீதி வலம் வந்து, கோபுர வாசலைத் தாண்டி முன் மண்டபத்துக்கு வந்துவிட்டது. மற்றவர்களுடன் சேர்ந்து நானும், நண்பனும் சுவாமியுடன் நடந்தோம்.

வாசலில் சுவாமியைச் சப்பரத்தில் ஏற்றிச் சப்பரத்தைத் தூக்கிச் சகடையில் வைத்தனர். ஜெனரேட்டர் ஸ்ராட் செய்ய, மின்விளக்குகளில் சப்பரம் ஜெகஜ்ஜோதியாப் பிரகாசித்தது. நாதஸ்வரக்காரர் ஏதோ ஒரு ராகத்தை நீட்டி முழக்கி வாசித்துக் கொண்டிருந்தார்.

''என்ன சபா, இது தானே வெடிக்கோட்டை அவுட்டு, விறிஸ் வாணங்களின்ரை நேரம்'' என்றேன்.

''மனேகர் என்ன சொல்லுருய்?''

''என்னடா தெரியாதா? சுவாமி வாசலுக்கு வருகிற பொழுது தானே இதுகளையெல்லாம் கொளுத்துறது.''

''ஓம் மச்சான் அது ஒரு காலம்!'' என்று சோகமாகப் பெருமூச்சு விட்டான் நண்பன்

''வெடிகள், அவுட்டுகளின் சத்தத்தைத் தாங்க மாட்டாமல் எத்தினை நாட்கள் காதுகளைப் பொத்தியிருக்கிறம்! நினைவிருக்கா?'' என்று சிரித்தேன்.

''அந்தப் புகையளுக்குப் பயந்து ஓடி ஒளிச்சும் இருக்கிறம்'' என்று நண்பனும் சிரித்தான்.

''இப்ப வாற சத்தங்களோட அதுகளை ஒப்பிட்டுப் பார்த்தா அதுகள் எந்த மூலைக்கு?''

''நாங்கள் கற்பனை பண்ணிக் கூடக் கண்டிராத காட்சிகள்!'' என்று நானும் சிரித்தேன்.

''மச்சான் இரவு நேரத்திலை கெலிக்கொப்டரில் இருந்து சுடுற காட்சியை நீ எப்பவாவது கண்டிருக்கிறியா?''

''எனக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கேல்லை!'' என்றேன்.

''நான் பார்த்திருக்கிறன். அந்தக் குண்டுகள் ஒவ்வொண்டும் ஒவ்வொரு சைஸ். ஒவ்வொரு நிறம், ஒவ்வொரு வேகம்! சிலவேளை ஆகாயத்திலை இருந்து பூப்பூவா உதிரும்!''

''என்னடா பாவி! கொலைக்களக் காட்சியை ரசிக்கிறியே?'' என்றேன் வியப்புடன்.

நாங்கள் கதை பேசிக்கொண்டே மெல்ல மெல்ல நடந்து தெற்கு வீதியை அடைந்துவிட்டோம். தெற்கு வீதி வெட்டைவெளி சோழகக் காற்றின் தாக்குதல் பலமாக இருந்தது. ஜிலு ஜிலு வென்றகாற்றுஉடலைத்தழுவிக் கொண்டோடியது சப்பரமும் தெற்குவீதிக்கு வந்துவிட்டது.

'சபா, எல்லாக் கஷ்டங்கள், துன்பங்கள், நெருக்குவாரங்களிலும் ஒரு நன்மையும் ஏற்படத்தான் செய்யுது' என்றேன்.

'நன்மையா? இதிலை என்ன நன்மை' என்ருன் நண்பன் வியப்புடன்.

'நாள் இருபத்திநாலு மணி நேரமும் செய்யிற திருவிழாவை பகலிலையே செய்யப் பழகீட்டமே!'

'அது நல்லதா?'

'எவ்வளவு நேரம் மிச்சம்? கோயிலடிலை சனமும் நிக்குது'

'அப்பிடியெண்டா, இரவு-பகல் எண்டுநிண்டு திருவிழாச் செய்யிற எங்களுடைய வழக்கம்...?'

'மச்சான் பழக்க வழக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாது! அந்த நாட்களிலை ராத் திருவிழாக்களுக்குச் சனம் வந்துது. இப்ப ஆர்வாருன்? அவனவனை வீட்டிலை படுத்துடுவன்! ஆராவது நாலு பேர் கோயிலடிலையே இருந்து தூங்கிவழிவங்கள். விடியப்புறம் சுவாமி தூக்கவுப ஆக்கள் இருக்காது! அதிலும் பாக்க சனத்தையும் வைச்சு இப்பிடிச் செய்யிறது நல்லதுதானே!'

'திருவிழாவை மாத்தி அமைக்கிறதை விட்டுட்டு. மக்களை ராத் திருவிழாவுக்கும் வரப்பண்ண வேணும்!'

'அது நடவாத அலுவல்!. கோயிலை வழிபாடு செய்வது தான் முக்கியம் இந்த அலங்காரத் திருவிழாக்களெல்லாம் சாதாரண பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டவை அந்தக் காலத்திலை பொது மக்களுக்கு வேறை பொழுது போக்கு இல்லை. அதாலை மேளம், சின்னமேளம், சப்பரம் வாணம் எண்டு எல்லா வேடிக்கைகளையும் சாமியின் பேராலை கோயிலடியிலே செய்துட்டு, எல்லோருமாக் கூடியிருந்து பாத்து மகிழ்ந்தார்கள். இந்தக் காலத்திலை பொதுமக்களுக்குப் பொழுது போக்கிறது ஒரு பிரச்சினை இல்லை. பொழுதைக் கண்டுபிடிக்கிறதுதான் பெரிய பிரச்சினை!என்று நான் சிரித்தேன்

'அப்ப என்ன மனேகர் இந்தத் திருவிழாக்களே தேவையில்லை எண்டு சொல்லுறியா?'

'இல்லை அளவாச் செய்யலாம்; பகல் திருவிழாவே போதும்!'

'செய்து வந்ததைச் செய்யாட்டாத் தெய்வம் கோபிக்கும்!'

'சபா! 'தெய்வம் கோபிக்கும்' என்ற கருத்தே பிழையானது! தெய்வம் ஒருநாளும் கோபியாது! மனிசர்தான் கோபிக்கிறது!' என்று நான் மீண்டும் சிரித்தேன்.

இதற்கிடையில் சுவாமி மேற்குவீதிக்கு வந்துவிட்டது. இது கொஞ்சம் ஒதுக்குப்புறமான இடம் மக்கள் இருந்து பார்க்க வசதி. விசேட திருவிழாக்களில் இந்த வீதியில் சிறிது நேரம் மேளக் கச்சேரி நடக்கும். அது முடிய அதிகமானேர், அனேகமாகப் பெண்கள் குழந்தைகள் வீடுதிரும்புவார்கள். எஞ்சியுள்ளவர்கள் சுவாமியுடன் வாசல்வரை சென்று பிறகு வீடேகுவர்.

அன்றும் விசேடமான திருவிழாத்தான். ஆனல் மேற்கு வீதியில் சுவாமி தரித்து நிற்கவுமில்லை மேளக் கச்சேரி நடக்கவுமில்லை. சகடையை விறுவிறுவென்று இழுத்துக்கொண்டு சென்று வடக்கு வீதிக்குத் திருப்பினர். திருவிழாப் பார்க்க வந்தவர்களும் யாரும் வீடு திரும்பவில்லை. சுவாமியுடன் தாங்களும் சென்றனர்

காற்று புழுதியை அள்ளிச் சொரிந்து கொண்டிருந்தது. சேட்டுப் போடாமல் வந்திருந்த ஆண்கள் எல்லாரும் புழுதியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கும் சங்கடமாக இருந்தது.

'சேட்டுப்போட்டந்திருந்தா இந்தப் புழுதித் தொல்லை இல்லை!' என்றேன்.

'என்ன சேட்டுப் போட்டுக் கொண்டு கோயிலுக்கு வரவா?' என்ருன் நண்பன் சற்றுக் காரமாக.

'ஏன் எத்தினை பேர் போட்டுக் கொண்டு வந்திருக்கிருங்கள். சேட்டுடன் கோபுர வாசல்வரையும் போகலாம். உள் வீதிக்கும் போனல் போச்சு!' என்றேன்.

என்ன சேட்டோடை உள் வீதிக்குப் போவதா?' என்று மீண்டும் சற்றுக் காரமாகக் கேட்டான் நண்பன்.

'அதுதான் நல்லது சுகாதாரமும்கூட வெறும் மேனியில் ஒருவரது வியர்வை மற்றவரிலை பட்டு, ஊத்தை ஏறி மற்றும் புழுதியும் படிஞ்சு வியர்வை மணக்காமல்... சேட் அணியிறது நல்லதுதானே?'

'ஆகமங்களிலை சொல்லப்பட்ட முறைதான். இந்துக் கோயில்களுக்கு போக வேணும்!'

'சேட் அணிந்து கொண்டு கோயிலுக்குள்ளை போகக் கூடாதெண்டு எந்த ஆகமத்திலே சொல்லியிருக்கு, சொல்லு பாப்பம்?' என்றேன் அழுத்தம் திருத்தமாக.

'உனக்கு அது எப்பிடித் தெரியும்?'

'அந்தக்கால ஓவியங்கள் சிலையளை எடுத்துப்பார்! எல்லாமே வேட்டியோடை வெறும் மேனியாகத்தானே நிக்குதுகள்? பெண்களுடைய சிலைகளிலை கூடச் சட்டையளைக் காணேல்லை. சிலர் மார்புக் கச்சு அணிந்திருக்கிருர்கள்!' என்று நான் சிரித்தேன்

'என்ன மனேகர், அப்ப பெண்கள் கூடச் சட்டை போட்டுக் கொண்டு கோயிலுக்குள்ளை போகக் கூடாதெண்டு சொல்லுறியா?'

'சேட் போடக்கூடாதெண்டாச் சட்டையும் அணியக் கூடாதுதான்! இது சமத்துவ காலம். ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே நீதியாயிருக்க வேணும்! நான் மீண்டும் சிரித்தேன்.

வடக்கு வீதியில் தவில் கச்சேரி நடப்பது வழக்கம். திருவிழாவுக்கு வந்த தவில்களெல்லாம் அதில் கலந்து கொள்ளும் எத்தனை கூட்டம் (மேளம்) வந்தது என்பதனையும் அறிந்து கொள்ளலாம். குறைந்தது அரை மணித்தியாலமாவது மேளச்சமா நடக்கும். அன்று ஒரு கச்சேரியும் நடக்கவில்லை. சகடையையும் சப்பறத்தையும் இழுத்துக் கொண்டு அடிச்சள்ளிக் கொண்டு கிழக்கு வீதியை நோக்கிப் போருர்கள்.

'மச்சான் மனேகர் புதுமையள் சீர்திருத்தங்களை கோயில் வழிபாட்டிலை புகுத்தக் கூடாது அது எப்பவும் பழமை தழுவித்தான் இருக்கவேணும்!' என்ருன் நண்பன்.

மச்சான் சபா, நாங்கள் இதுவரேலை கோயில்களிலும் வழிபாட்டு முறைகளிலும் எத்தனை புதுமையளைப் புகுத்திட்டம்! சொல்லட்டுமா?' என்றேன்.

'சரி சொல்லு' என்ருன் நண்பன் ஆவலாக

நிலத்துக்குக் காறை போட்டும் மண்டபங்களெல்லாம் எலெக்றிக்லைட் சுவாமிக்குக்கூட நெய்விளக்கு எண்ணை விளக்குக்குப் பதில் மின்குமிழ் வெளிச்சம் சப்பரம், தண்டிகைக்கு தீவெட்டிக்குப் பதில் மின்சார விளக்குகள்!

'பக்திப் பாடல்களை எல்லாரும் கேட்கக் கூடியதாக ஒலிபெருக்கிலை ஒலிக்கச் செய்யிறது நல்லதுதானே?'

'மச்சான் சபா, கோயில்களிலை பாடப்பட வேண்டியது திருமுறையள்! அல்லது

=13 ஆம் பக்கம் பார்க்க



# இந்துபோர்ட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்

**★ ★ ★ தோடர் கட்டுரை**

## இராசரத்தினம் அவர்களின் அரசியல் ஈடுபாடு

இராசரத்தினம் அவர்கள் தோன்றிய காலத்தில் இலங்கைத் தேசாதிபதியாயிருந்தவர் சேர் ஹமில்ரன் கோடன் என்பவராவர். அவர் இலங்கைத் தேசாதிபதிகள் வரிசையில் பதினேழாமவர். முன்னர் பிரடறிக்நோத் என்பார். 1798 முதல் ஆளத் தொடங்கிய கால முதல் தேசாதிபதிகள் தம்மிட்டம் போலவே நடந்துகொண்டனர். பின்னர் 1833ஆம் ஆண்டிலேதான் கோல்புறூக் விசாரணைக்குழுவினரின் தகவுரையின் வண்ணம் தேசாதிபதிகளுக்கு ஆலோசனை கூறுவதற்குச் சட்டசபை உருவானது அது சட்டமியற்றுதல், சட்ட நிறைவேற்றஞ் செய்தல் ஆகிய கருமங்களைச் செய்து வந்தது.

சட்டசபையில் பெரும்பான்மையினராயிருந்தவர்கள் உயர் உத்தியோகத்தர்கள். அவர்களை உத்தியோக அங்கத்தவர் எனவே வழங்கினர். அவர்களை அடுத்து இருந்தவர்கள் ஆங்கிலேயர், ஐரோப்பியர், பறங்கியர், சிங்களவர், தமிழர் ஆகியோரின் பிரதிநிதிகளாவர். இவர்களை உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் என்பர். இவர்களுள் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியே முஸ்லிம்களின் பிரதிநிதியுமாவர். உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகள் யாவரும் தேசாதிபதி அவர்களால் நியமனம் பெற்றவர்களே யாவர். இவர்கள் தொகை உத்தியோகப் பிரதிநிதிகள் தொகையிலும் பார்க்க வெகுவாகக் குறைவானதாகவே இருந்தது.

தமிழ்ப் பிரதிநிதி குமாரசுவாமி அவர்கள் 1857 இல் மறைந்ததும், பிரதிநிதியானவர் கறபிட்டியைச் சேர்ந்த சைமன் காசிச்செட்டியார் என்பவராவர். செட்டியார் அரசாங்க உத்தியோகத்துக்கே உரியவர் எனக் கண்ட குடியேற்ற நாட்டு மந்திரியார் விடுத்த ஆணைவலுவினால், சட்டசபைப் பிரதிநிதியாக நியமனம் பெற்றவர் சுவாமிநாதர் எதிர்மன்ன சிங்கமுதலியாராவர். இவர் முன்சொன்ன குமாரசுவாமி முதலியாரின் சகோதரியாரின் மைந்தராவர்.

எதிர்மன்ன சிங்கமுதலியாரின் பின் 1861ஆம் ஆண்டு முதல் 1879ஆம் ஆண்டுவரையும் பிரதிநிதியாயிருந்தவர் குமாரசுவாமி முதலியாரின் மைந்தன் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களாவர். அவருக்குப் பின் பிரதிநிதியாக நியமனம் பெற்றவர் மருகர் சேர் இராமநாதன் அவர்களாவர். சேர் இராமநாதன் அவர்களின் நியமனத்தில் ஆறுமுகநாவலர் அவர்களின் குரல் வென்றது

சேர் இராமநாதன் அவர்கள் 14-12-1892 முதல் சட்ட அறிஞர் நாயகம் என்னும் சொலிசைற்றர் ஜெனரல் பதவி ஏற்று, உத்தியோக அங்கத்தவராயிருந்த காலத்தில், தமிழர் பிரதிநிதியாக நியமனம் பெற்றவர் இவரின் தமையனார் குமாரசுவாமி முதலியாராவர். குமாரசுவாமிமுதலியார் எவருக்கும் அஞ்சாதவர். சிறந்த தமிழறிஞர். அவர் ஒரு சமயம் அரசாங்கத்தின்போக்கு வழிப்பறிகாரரின் போக்கு என்று சபையில் பேசியமை தேசாதிபதியைத் தாக்கியது. குமாரசுவாமி முதலியாரின் வன்மையான் குற்றச்சாட்டைக் கேட்டு வஞ்சினம் கொண்ட தேசாதிபதி, பழையபவரன் முறையமைப்பானால் எதுவுஞ் செய்திருக்கமாட்டார். ஆனால் 1889ஆம் ஆண்டில் உண்டான சட்டசபை நியமனம், காலவரையைப் பொறுத்ததாகும். முன்னர் ஆயுட்கால நியமன முறையிருந்தது. புதிய முறையிலேதான், கண்டிச் சிங்களவருக்கு ஒரு பிரதிநிதியும் முஸ்லிம்களுக்கு ஒரு பிரதிநிதியும் இடம்பெற்றார்கள்.

எனவே குமாரசுவாமி முதலியாரின் அங்கத்துவ காலம் முடிந்ததும், எம்மவர் அவரை மீண்டும் நியமிக்குமாறு தேசாதிபதி அவர்களைக் கேட்டனர். சிலர் பிறிட்டோ என்னும் நீதிபதி அவர்களின் மருகர் சுவாமிநாதன் அவர்களை நியமிக்குமாறு விண்ணப்பித்தனர். ஆனால் வஞ்சினம் கொண்டிருந்த தேசாதிபதி றிச்வே, குமாரசுவாமி அவர்களை நியமிக்குமாறு கேட்ட கூட்டத்தினரின் தலைவரான ஹெக்வுட் என்பாரை இரகசியமாய் அழைத்து மனத்தைமாற்றி, அவரையே நியமித்தார்.

ஹெக்வுட் சில காலத்தில் இங்கிலாந்துக்குப் போனதும், தேசாதிபதி அசரப்பா என்னும் பெரியாரைத் தற்காலிகமாக நியமித்தார். ஹெக்வுட் யாழ்ப்பாணத் தமிழருள் பெருஞ் சிறப்புப்பெற்ற அறுவை வைத்தியர். ஹெக்வுட் அவர்களுக்குப் பின் குமாரசுவாமி முதலியார் மீண்டும் தமிழர் பிரதிநிதியானார். அவர் 1903 முதல் பிரதிநிதியாய் இருந்தபோது 1906ஆம் ஆண்டில் மறைந்ததும், தெல்லிப்பழை அம்பலவாணர் கனகசபை அவர்கள் பிரதிநிதியாகி இரு தடவை நியமனம் பெற்றார்.

சேர் கனகசபை சட்ட நிறைவேற்றும் சபையிலும் இடம்பெற்றிருந்தார். அவர் காலத்திலேதான் தமிழர்க்காய இரண்டாம் பிரதிநிதியும் நியமனம் பெற்றார். அந்த வாய்ப்பைப் பெற்றவர் மட்டக்களப்பைச் சேர்ந்த திசைவீரசிங்கமாவர் திசைவீரசிங்கத்தின் பின் நியமனம் பெற்றவர் வைமன் கதிரைவேற்பிள்ளை மைந்தன் பாலசிங்கம் என்னும் நிபுணராவர். சேர் கனகசபை அவர்களின் பின் நியமனம் பெற்றவர் தலையாளி சபாபதி அவர்களாவர். சபாபதி அவர்களின் நேர்மையும் பெருமையும் தனியாக எழுதப்பெறவேண்டியவை.

இவ்வாறாக உழுத்துப்போன பழைய சட்டசபையை முற்றாக நீக்கவிரும்பாத ஆங்கிலேயர் அதனை 1833 முதல் 1931 வரை சில திருத்தங்களோடு கொண்டிழுத்தனர். பிற்காலத்தில் உண்டான திருத்தங்களின் பயனாக உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகள் தொகை அதிகரித்தமை, வாக்களித்தல் முறையில் பிரதிநிதிகள் தெரியப்பெற்றமை, ஒரு சில பொறுப்புக்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கனவாகும்.

சட்டசபையில் திருத்தங்கள் கோரிய ஆங்கிலேயர், பறங்கியர், சிங்களவர், தமிழர் என்பாருள் இராமநாதன் சகோதரர் அருணாசலம் சிறப்பிடம் பெற்றிருந்தனர். எமது அரசியல் தேவைகள் என்று வெளிப்படையாக எடுத்துப் பேசி. பூரண சுதந்திரம் பெறுவதற்கு முயற்சி செய்வதற்கு இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்னும் நிறுவனத்தை முதலில் கூட்டியவர் அருணாசலம் அவர்களேயாம் அவரே நாட்டின் தேச பிதாவுமாவர். அருணி எனச் செல்லமாக அழைத்து அவர் பின் சென்றவர்களே யேம்ஸ் பீரிஸ், டொன்பாரன் ஜயதிலக, மூத்தசேனநாயக முதலானோராவர். தேசிய மகா சபையினர் சட்டசபையில் திருத்தங்கோரியபோது, அருணாசலம் தலைமைதாங்கி, யேம்ஸ் பீரிஸ், பாரன்ஜயத்திலக ஆகியோரையும் அழைத்துக் கொண்டு லண்டனுக்குப் போனார்.

மில்னர் பிரபு அருணி சொன்னவற்றை முறையானவை என ஒப்புக்கொண்டார். அதன் பின் மனிங் தேசாதிபதி சட்டசபையில் செய்த திருத்தங் காரணமாக உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் இருபது மூவரும், உத்தியோக அங்கத்தவர் பதினான்குபேரும் இடம்பெற்றனர் அக்காலத்தில் மாகாணம் தோறும் ஒவ்வொரு பிரதிநிதி தெரியப்பெறும் வாய்ப்புக் கிடைத்தது. அதனால் வைத்திலிங்கம் துரைசுவாமி வடமாகாணப் பிரதிநிதியாகத் தெரியப் பெற்றார். சேர் இராமநாதன் நியமன அங்கத்தவராயிருந்தார்.

மாகாண ரீதியில் ஒவ்வொரு பிரதிநிதி தெரியப்பெறலாம் என அமைத்த விதி மேல் மாகாணத்தில் மூவருக்கு இடங்கொடுத்தது. வெள்ளவத்தை உள்ளிட்ட ஊர்களில் தமிழர் நெருக்கமாக வாழ்ந்தார்கள். எனவே, சின்ன யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்ற அந்தத்தொகுதி தமிழர் ஒருவருக்கே உரியதாகலாம் என்றும் அதற்கு அருணாசலம் அவர்களே தகுதியானவர் என்றும் எல்லோரும் கருதினர். ஆனால் சிங்களப் பெரியார் ஒருவரின் பெண்கள் இருவருள் ஒருத்தி கணவன் அபேட்சகரும் இடம்பெற்றபோது மற்றவள் தன் கணவனுக்கு எங்கே இடம் என்று கேட்டபோது அரசியல் தலைவர்கள் கொழும்பு தெற்கை அவளுக்குத் தாரைவார்த்ததோடு, தேசியத்தை முறித்து வகுப்புவாதத்தை நாட்டில் நாட்டினர்.

அருணாசலம் அவர்கள் தேசியங்கெட்ட காங்கிரஸைவிட்டு விலகி ஏனைய சமூகத்தாரோடு இணைந்து ஐக்கிய முன்னணி ஒன்றை உண்டாக்கித் திருத்தங்கோரினார். இராமநாதன் அவர்களும் நாட்டில் 45,00,000 மக்கள் வாழும் போது ஒரு லட்சம் மக்களுக்கு ஒரு பிரதிநிதியாவது வேண்டாவோ எனக் கூறிச் சட்டசபையை விசாலிக்குமாறு திருத்தங்கோரினார்.

**க.சி.குலரத்தினம்**

அக்காலத்திலே சட்டசபையில் திருத்தங்கோரிய இன்னொரு தமிழ்ப் பெரியார் சேர் அம்பலவாணர் கனகசபை. இவர் நைற்பட்டம் பெற்ற தமிழருள் மூன்றாமவர். முதலிருவரும் முத்துக்குமாரசுவாமியும் அருணாசலமுமாவர். சேர் கனகசபை திருத்தங்கோரிய போது, தமிழர் மகாசபை என ஒரு தாபனத்தை உருவாக்கினார் அதில் உள்ளுறுப்பினராயிருந்து பணிபுரிந்தவர் அப்புக்காத்தர் இராசரத்தினம் அவர்களாவர் அன்றைய தமிழர் மகாசபையில் உள்ளுறுப்பினர் என இருந்த இராசரத்தினம் உண்மையிலேயே உள்மந்திரம் (Inner Cabinet) எனும் அவையில் உறுப்பினர் என இருந்து பெரும் வேலைகளைக் கவனித்தார். அவரின் பன்முக ஞானம் பலராலும் பாராட்டப்பெற்றது.

இவ்வாறாக இலங்கைச் சட்டசபை 1924ஆம் ஆண்டில் 90 வயதைக் கண்டது. அது அன்றும் பழைய பெயரிலேயே சில மாற்றங்களோடு புதிய தேர்தலை எதிர்பார்த்தது. சேர் இராமநாதன் 45,00.000 மக்களுக்கு 45 பிரதிநிதிகளாவது வேண்டும் என்றார். ஆனால் மனிங் தேசாதிபதி மனமிளகி 47 பிரதிநிதிகளுக்கு இணங்கினார். அப்பால் குடியேற்ற மந்திரியால் மேலும் இரங்கி 49 பிரதிநிதிகளுக்கு இடம் கொடுத்தார். பழைய பாரம்பரியத்தை மாற்றி உத்தியோக அங்கத்தவர் தொகையைக் குறைத்து, உத்தியோக பற்றற்றவர் தொகையை அதிகரிக்கச் செய்தார். ஆனால் உத்தியோகத்தவர் தொகை 12 ஆனது. பற்றற்றவர் தொகை 37 ஆனது. தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தெரிய வாய்ப்புக்கிடைத்தபோது 16 சிங்களவரும் 7 தமிழரும் இடம்பெறவும், பழைய வகுப்புவாத நியமனத்தில் மூவர் ஐரோப்பியர், இருவர் பறங்கியர், ஒருவர் கொழும்புத் தமிழர் இடம்பெறவும், நியமன முறையில் முஸ்லிம்கள் மூவர், இந்தியர் இருவர் இடம்பெறவும், இன்னும் சிறப்புமுறையில் (Special Representation) மூவர் இடம்பெறவும் வாய்ப்பு வந்தது அருணாசலம் கேட்ட கொழும்புத் தமிழ் ஆசனம் தமிழருக்குக் கிட்டுவதற்குச் சிங்களவருக்கு இரண்டு ஆசனங்கள் மேலதிகமாகக் கொடுக்கப்பெற்றது.

இனி இலங்கையில் ஆள்புலவாரியாக ஓரளவு தாராளமான வாக்குரிமை கொண்டு நடத்தப்பட்ட தேர்தலில் தொகுதிகள் அமைந்த விதம் கவனிக்க வேண்டியதாகும்.

1. மேல்மாகாணம் — 5
2. தென்மாகாணம் — 3
3. வடமாகாணம் — 5
4. கீழ்மாகாணம் — 2
5. மத்திய மாகாணம் — 2
6. வடமேல்மாகாணம் — 2
7. வடமத்தியமாகாணம் — 1
8. ஊவாமாகாணம் — 1
9. சப்பிரகமுவ மாகாணம் — 2

வடமாகாணத் தொகுதிகள் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மத்தி என்பனவாம் பழையசட்டசபை 29-8-1924 ஆம் நாளில் குலைக்கப்பட்டு புதிய சபைக்கான நாள் 15-10 1924 என அறிவிக்கப்பட்டது தேர்தலில் தேசியம் என்பது புறக்கணிக்கப்பட்டு வகுப்புவாதப் பேச்சே ஒலித்தது அது முறுக்கேறி நிலவியது அன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுள் ஒன்றிலாவது அறிவு இருத்தல் வேண்டியதாயிருந்தது. இருபத்தொருவயதுக்கு மேற்பட்டவராய், வருடம் 600 ரூபா வருமானமுள்ளவராயிருத்தல் ஒரு விதி. வாக்காளர் ஆண்களாகவே இருந்தனர். இலங்கையில் அன்று இரண்டு லட்சத்து ஐயாயிரம் வாக்காளர் இருந்தனர்.

அன்று இரண்டரைலட்சம் ஆண்கள் வாக்குரிமை பெற்றிருந்த போது, குறைந்தது இரண்டு லட்சம் பெண்களாவது வாக்குரிமை பெற்றிருக்கலாம். ஆனால் பெண்களுக்கு வாக்குரிமை என்பது அன்று இங்கிலாந்திலும் கிடைக்காத கிட்டாத உரிமையாகவே இருந்தது. ஐரோப்பிய வரலாற்றிலே சில நாடுகளில் பெண்கள் செங்கோல் பிடித்தலாகாது என்று சலிக்லோ என்னும் சட்டம் தடைவிதித்திருந்தது. அன்று இலங்கையைச் சுற்றிப் பார்த்த பியர்ஸ் என்னும் ஸ்பானியன் இலங்கை ஆள் வலுவுள்ள நாடு, இங்கே பெண்கள் வெளி வேலைகள் பார்த்தல் கிடையாது. அவர்கள் தேயிலை கொய்தல், தெருக் கூட்டுதல் செய்வது உண்டு என்றுகுநட்டு வாக்கில் எழுதியதும் உண்டு.

இவ்வாறாக 1924-ஆம் ஆண்டுச் சட்டசபைத் தேர்தலுக்காக வடமாநிலம் ஐந்து தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது, அவை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி எனப் பெயர் பெற்றன இத்தொகுதிகள் தொறும் தேர்தல் மூலம் தெரியப்பெற்றவர்கள் ஐவரும் பெரியவர்களேயாவர்.

1. வடக்கு — சேர் பொன்னம்பலம் இராமநாதன்
2. கிழக்கு — கதிரைவெற்பிள்ளை பாலசிங்கம்
3. தெற்கு — ஆறுமுகம் கனகரத்தினம்
4. மேற்கு — வைத்திலிங்கம் துரைசுவாமி
5. மத்தி — சுப்பிரமணியம் இராசரத்தினம்

இனி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புத் தொகுதியில் இமானுவேல் இராசநாயகம் தம்பிமுத்து என்பாரும் திருகோணமலைத் தொகுதியில் மயில்வாகனம் சுப்பிரமணியம் அவர்களும் தெரியப்பெற்றார்கள். கொழும்பு தெற்குத் தொகுதி தமிழர்க்கெனவே ஒதுக்கப்பெற்றதால் அதில் சிங்களவர் தலைகாட்டவில்லை. அங்கே அருணாசலம் அவர்களின் மைந்தர் மகாதேவா, மருகர் ஸ்ரீபத்மநாதன், இன்னும் டாக்டர் குமாரசுவாமி என்னும் மூவர் போட்டியிட்டபோது மகாதேவா அவர்கள் தெரியப்பெற்றார். தெரியப்பெற்ற தமிழ் பிரதிநிதிகள் யாவரும் சேர் இராமநாதன் அவர்களைப் பின்பற்றி நீண்ட கோட், தலைப்பாகை அணிந்து சபையை அலங்கரித்தார்கள்.

இப்பால் இராசரத்தினம் அவர்கள் தெரியப்பெற்ற யாழ்ப்பாணம் மத்திய தொகுதி இருபாலை தொடக்கம் ஆவரங்கால்வரை பரந்து அப்பால் சாவகச்சேரிவரை வளைந்திருந்தது அன்று இராசரத்தினம் அவர்களுடன் போட்டியிட்டவர் புத்தூர் புகழ்பெற்ற மழவராயர் குடும்பத்தைச் சேர்ந்த சீமை அப்புக்காத்தர் என்னும் பரிஸ்டரும், உடுப்பிட்டியில் பெரியவீட்டில் திருமணஞ் செய்த செல்வரும் பெருங் கொடையாளி எனப் பெயர் பெற்ற வள்ளலும், எல்லோராலும் செல்லமாகத் தம்பி என அழைக்கப்பெற்றவருமான சிற்றம்பலம் இராமநாதன் என்பாராவர்.

வாக்களிக்கும் தானங்கள் கோப்பாய், ஆவரங்கால். சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைந்தன தேர்தல் 27-9-1924 ஆம் நாள் நடைபெற்றது. சாவகச்சேரியிலும் கோப்பாயிலும் இராசரத்தினம் அவர்களுக்கு அதிகவாக்குகள் கிடைத்தன. அவர்வெற்றியீட்டி, அவர் சட்டசபையில் கௌரவ இராசரத்தினம் ஆயினார் இக்காலத்திலே தன் சட்டசபை பிரதிநிதிகளுக்கு

...13 ஆம் பக்கம் பார்க்க

# தமிழிலக்கிய பாரம்பரியத்தில் ஊரெழுவின் பங்களிப்பு

தமிழ் இலக்கியப் பெருங் கடலில் சங்கமிக்கும் ஆறுகள் பல. அவை சைவம், வைணவம், சாக்தம், புத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்ற சமயப் பூச்சுக்களுடனும் போய்ச்சேருகின்றன குடும்பம், ஊர், பிரதேசம், நாடு என்ற முலாம் பூசப்பட்டும் சங்கமிக்கின்றன. இந்த வகையில் ஊரெழு கிராமமும் தனது பங்களிப்பைச் செய்துள்ளது; என்பதனை அறியும்போது நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். எமது சிற்றூரிலும் அறிவுக் கண் மரபொன்று தொடர்கிறது என்பதில் பெருமிதம்.

1916—ம் ஆண்டில் இயற்கை எய்திய ஊரெழு சரவணமுத்துப் புலவர் அயலூராகிய புன்னாலைக்கட்டுவன் பிரம்மஸ்ரீ கதிர்காம ஐயரிடம் படித்துள்ளார். (தமிழ்ப்புலவர் சரித்திரம்) கதிர்காம ஐயர் அவர்கள் ஊரெழு மயில்வாகனப் புலவரிடம் பாடங்கேட்டுள்ளார். தமிழ்ப்புலவர் சரித்திரங்கள் வாயிலாக மயில்வாகனப்புலவர் பற்றி இதற்கு மேல் அறிய முடியவில்லை. 19—ம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவர் என்ற பெயரில் சிலர் இருந்திருக்கிறார்கள். புலவர் அவர்கள் விவாகம் செய்து வேறு கிராமத்தில் வாழ்ந்தாரோ என்பதற்கும் தக்க ஆதாரங்கள்கைக்கெட்டவில்லை ஆயினும் 19—ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் ஊரெழு மயில்வாகனப் புலவர் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதத்தோன்றுகிறது ஊரெழுவின் இலக்கிய பாரம்பரியம் பற்றி ஆராயமுற்படுபவர்கள் இவ் விஷயத்தில் கவனம் செலுத்தும்போது, கூடிய தகவல்கள் கிடைக்கலாம். காலம் பதிலளிக்கும்.

மயில்வாகனப் புலவரின் மாணாக்க பரம்பரையைச் சேர்ந்தவரான ஊரெழு சரவணமுத்துப்புலவர் பிரம்ம ஸ்ரீ கதிர்காம ஐயரிடம் இலக்கியமும், சுன்னாகம் இலக்கணக் கொட்டர் முருகேச பண்டிதரிடம் இலக்கணமுங் கற்றவர். சுன்னாகம் குமாரசாமிப் புலவரும், ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையும் புலவருடன் கற்றுள்ளார்கள். அந்தக்கால யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தில் உடன்படித்த மூவரும் வித்தக உறுப்பினராக இருந்துள்ளார்கள். நமது புலவர் பல துறைகளிலும் வல்லமை படைத்த வித்தகர் கவி பாடுவதில் அவர்கள் ஒரு குட்டிக் காளமேகம். கண்டனம் எழுதுவதில் சமர்த்தர். சிறந்தகட்டுரையாளர். பத்திரிகை ஆசிரியர். திறமான மேடைப் பிரசங்கி சிலதுறைகளில் நாவலர் பெருமானின் வாரிசுஎனக் கணிக்கப்பட்டவர்கள்.

ஒரு பத்திரிகையை நடாத்த வேண்டுமென்ற தன்மான உணர்வால் உந்தப்பட்டவராய் சைவ உதய பானு என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடாத்தினர் இதுவே முதல் தமிழ் மொழி மூலம் வெளிவந்த சைவ சமயப் பத்திரிகையாகும். ஏக காலத்தில் மதுரையிலும் யாழ்ப்பாணத்திலும் இப்பத்திரிகை வெளிவந்தது. வசதிகள் குறைவான அந்தக்காலத்தில்ஒருபத்திரிகையைத் தொடங்கி நடாத்துவது என்பது சாமானிய காரியமன்று. இம்முயற்சியின் காத்திரத்தன்மைதான் பத்திராதிபர் சரவணமுத்துப்பிள்ளை என்ற பெயர்மேலோங்கக்காரணமாயிருத்தல் வேண்டும். போலிக்கொள்கைகளை எதிர்த்துக் கண்டனம் எழுதுவதற்குக் தமது பத்திரிகையைப் பெரிதும் பயன்படுத்தினர்கள்.

புலவர் அவர்கள் சைவ சித்தாந்தப் பிரசாரகர் எனப் புகழ்ந்து பேசப்பட்டார். கொழும்பு சைவ பரிபாலன சபையில் சில காலம் பிரசாரகராக இருந்தார். தென்னிந்தியாவிலும் சைவப் பிரசங்கம் செய்து புகழீட்டினர். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் சென்றுபிரசங்கமாரி பொழிந்தார். அவர்கள் கற்ற ஆங்கில மொழி பல துறைகளிலும் உதவியது புலவரின் பிரசங்கத்திறமையால் சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகர் எனப்போற்றப்பட்டார். பேச்சுத்திறமை எழுத்துத் திறமைக்கப்பால், விரைவாகக் கவிபாடுவதில் அவர்கள் ஒரு குட்டிக்கம்பன்தான் இராமநாதபுரத்து மன்னனாகிய பாஸ்கர சேதுபதி மீது ஒரு பிரபந்தமும் தேர்க்கவியும் பாடிப்பாராட்டப் பட்டவர். நெஞ்சை உருக்கும் அவர்களது பாடல்களுக்கு. நாவலர் பெருமான் அமரராகிய காலத்தில் பாடிய பாடல்கள் எடுத்துக்காட்டாகும்.

## ச. கதிரவேலு பி. ஏ.
## ஊரெழு

அண்மைக்காலத்தில் புலவரைப்பற்றிய சிந்தனை சற்று அதிகமாக கருக்கட்டியுள்ளது. 1974-ல் ஊரெழு விநாயகர் தேர்மலர் வெளியீட்டில் தேர் வெண்பா என்ற கட்டுரை வெளிவந்தது. 1981-ல் பொன்மலர் என்ற வெளியீட்டில் ஊரெழு சு. சரவணமுத்துப் புலவர் ஒரு மதிப்பீடு என்ற ஆய்வுக் கட்டுரை வெளியிடப்பட்டது (கலாநிதிகைலாசபதி) அதே மலரில், 'ஊரெழு காண்பீர்' என்ற தலைப்பில் தரப்பட்ட கவிதையில் "சைவமும் தமிழும் காக்கவென்றே சரவணமுத்துவெனும் சான்றோனைப் பெற்றெடுத்து .. .." எனத்தொடர்கிறது இந்த நிலையை நோக்கும்போது புலவர் பற்றிய ஆய்வுகளும் எழுத்துகளும் மேலும் விரிவடையலாம் எனத்தோன்றுகிறது.

'கனகாம்பரம்' ஆசிரியர், ஊரெழுவை அறிமுகப்படுத்தும்போது, மயில்வாகனப் புலவர், சரவணமுத்துப்புலவர், முருகேசையர், ஆழ்கடலான், வேலன் புலவர் என்று அடுக்கிக் கொண்டு போகிறார். ஊரெழுவின் அறிவுக் கண்ணோட்டத்தைப்பற்றி ஆயும் வாய்ப்பினை அளிக்கிறார் போலும்.

ஊரெழு பிரம்மஸ்ரீ முருகேசையர், கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஊரெழுவில் விவாகம் செய்தவர்கள், மகாவித்துவான் கணேசையர், தென்கோவை கந்தையாபிள்ளை என்போர் உடன் மாணவராக, சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் கற்றவர்கள். மதுரைத்தமிழ்ச் சங்க உறுப்பினராகவும் பரீட்சகராகவும் இருந்துள்ளார்கள். தர்க்கரீதியாக கதைப்பதில் வல்லவர். பேச்சு எப்போதும் சிலேடையாகவே இருக்கும். குத்தலாக கதை சொல்வதில் சமர்த்தர். எதற்கும் உடனடியாக விடை கூறக்கூடியவர். செந்தமிழ் இதழில் அவர்களின் கட்டுரைகள் சிலவற்றை யான் படித்துள்ளேன் சைவசமய தத்துவங்களை, மனிதனின் நாளாந்த வாழ்க்கையுடன் சேர்த்து தொடர்புபடுத்தி விளக்கக் கூடியவர். பொதுவாகக்கண்டனம் செய்வதிலும், கண்டித்து எழுதுவதிலும் ஆற்றல் படைத்தவர். அவர்களிடம் சமயமும், யாப்பும் படிக்கும் வாய்ப்பு அடியேனுக்குக் கிடைத்தது.

இங்கே பேசப்படும் இலக்கியப் பெருங்கடல் நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் அறிவுக் கண்-இலக்கியப் பேராறு கவிஞர் முருகவே. பரமநாதன் (ஆழ்கடலான்) ஆவர். அவர்களுக்குக் கவிதைவார்ப்பு என்பது ஒரு கைவந்த கலை, தண்ணீர் பட்டபாடு. மற்றவர் மனம் உருகப் பாடவல்லவர் பாட்டுப் பாடவென என்றுமே நெகிழ்ந்தநிலையில் உள்ளத்தை வைத்திருப்பவர்கள். துறை இது அது என்ற வேறுபாடு இல்லை. ஆனால் எதற்தள்ளும் ஒரு பக்தி இழையோடும். பிறந்து வளர்ந்த வல்லிபுரக் குறிச்சியில் எழுந்தருளியுள்ள நாராயணன் பேரில், வல்லிபுரத்தான் தலபுராணம் என்ற பக்தி இலக்கியத்தைத் தந்துள்ளார்கள் ஊரெழு மீனாட்சி அம்மனை வேண்டியும் ஒரு தோத்திரப்பா மாலை. அடிக்கடி பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்ததும். வராததுமான கவிதைத் தொகுப்பையும், பிள்ளைத்தமிழையும் தமிழ் இலக்கிய வட்டமும், சைவ மக்களும் வெகு விரைவில் சுவைக்க இருக்கின்றனர் சுவையான கவிஞனை ஆழ்கடலான் ஆழமான சிந்தனையாளனும், இறுக்கமான வசன நடையாளனுமாவர். இவர்களைப்பற்றி கூறவேண்டிய பெறுமதியான செய்தி ஒன்றுண்டு. வல்லிபுரத்தில் இருந்து ஊரெழுவுக்கு வந்தவர் இந்தச்செம்பாட்டிலே, முன்னர் எழுதப்பட்ட சு.சரவணமுத்துப் புலவர் குடும்பத்தில் 'செம்புலப் பெயல்நீராக' ஒன்றிவிட்டார். விதையும் விளைநிலமும் நல்ல மாதிரி அமைந்ததே என்பதை எதிர் காலம் அனுபவித்து மகிழும்.

ஓடிக்கொண்டிருக்கும் இன்னுமொரு அறிவு ஆறு வித்துவான் வேலன் எனப்படும் கலாநிதி க. ந. இரத்தினவேல் ஆவார். பேரப்பிள்ளையுடன் இருந்து வாசித்து. கலாநிதிப் பட்டம பெற்றுள்ளார். முயற்சிக்கும், திறமைக்கும், துணிவுக்கும் இதனை விட வேறென்ன வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே படித்துப் புலவர் பட்டம் பெற்றவர்கள் ஈழத்தின் தலைசிறந்த மேடைப்பேச்சாளர் பேசும் போது சபையைத் தன் பின்னே இழுத்துக்கொண்டு போய்விடுவார். 1956 ஆம் ஆண்டு திரிகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மகாநாட்டிலே தான் அவர்களது நாவன்மைக்கு, பேச்சுக்கலைக்கு இலக்கிய அந்தஸ்து கிடைத்தது.

எதிர்நீச்சல் அடிப்பதில் ஒரு தீரர். சைவ சித்தாந்த சாஸ்திரங்களைக் கற்றுத் தேறிப் பட்டம் பெற்ற பெரியாராவர் கலாநிதிப் பட்டப் படிப்புக்கு பொருளாக யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் சிந்தனைகளைப் பற்றி ஆராய்ந்தார்கள். சுவாமி அவர்களின் சிந்தனை தமிழ்ஈழ மக்களின் இன்றைய நிலயில், பெருமளவுக்குப் பொருத்தமானதென்பதையும் வலியுறுத்தியுள்ளார்கள்.

நாவல், இலக்கியம்.சிறுகதை ஆகிய துறைகளில் தன்னை வளர்த்துவரும் கலாநிதி துரை மனோகரன் அவர்களும், இந்த வரிசையில் முதன்மையான துறைவல்லுநர்களே. இன்னும் பல

... 13 ஆம் பக்கம் பார்க்க

# மிளகாய் செய்கைக்கான நாற்று மேடை அமைத்தல்

**சி. கதிர்காமநாதன்**
**விவசாய போதனாசிரியர்**

**விவசாய தகவல்**

### 1. நிலம் தெரிதல்

நல்ல நீர் வடிப்புள்ள, சூரிய ஒளி கிடைக்கக் கூடிய, கற்கள், வேர்கள் அற்ற இடமாகவும், முன்னர் சொலனேசியக் குடும்பப் பயிர்கள் செய்யப்படாத இடமாகவும், நேரடிக் காற்றுத் தாக்கம் இல்லாத முன்பு செய்கை பண்ணப்படாத நீர் வசதியான இடத்தைத் தெரிவு செய்யவும்.

### 2. இடத்தைத் தயார் செய்தல்

இடத்தைத் துப்பரவாக்கி ஆழமாக உழுது அல்லது சொத்தி உக்கிய மாட்டெரு/கூட்டெரு இட்டு மட்டப் படுத்துக. கால் நடைகளில் இருந்து பாதுகாப்பது அவசியம்.

### 3. மேடை அமைத்தல்

அ. 10 அடி × 3 அடி அளவான மேடை.

ஆ. மேடைக்கு கூட்டெரு அல்லது நன்கு உக்கிய மாட்டெரு, மேல்மண் 1:1 கலந்து இடுக.

இ. 10 அடி × 3 அடி அளவான 12 மேடைகள் ஒரு ஏக்கருக்கான நாற்றுக்களைப் பெறப் போதுமானது

ஈ. ஒரு மேடைக்கு 6 அவுன்ஸ் 13:11:6 மிளகாய்க் கலவை உரம் இடவும்.

### 4. நாற்று மேடை வகைகள்

மேடை 1. உயர் மேடை
2. தாழ் மேடை

பாத்திரங்கள் :-
1. உலோகம்
2. கடதாசி
3. பொலித்தீன்
4. நெறி டோகோ

### 5. விதைகளை பிரித்தலும் தெரிதலும்

1 நன்றாகப்பழுத்த பழங்களை 1-ம் 2-ம் அறுவடையில் இருந்து பெறுக.

2. ஒரு கி. கி. விதை பெற $3\frac{1}{2}$—$4\frac{1}{2}$ கிலோ உலர் மிளகாய் தேவை.

3. சிறந்த பழங்களில் இருந்து விதை எடுக்குக.

4. விதைகளையும் தெரிந்து எடுக்குக.

### 6. மேடைத் தொற்று நீக்கம்

1. எரித்தல்

அ. வைக்கோலும், உமியும் படை படையாக 4 அங்குல –6 அங்குல உயரத்திற்கு இட்டு எரித்தல்.

ஆ. 2 — 3 நாட்களின் பின் மேடையைக்கிளறி மீண்டும் ஒரு முறை எரித்தல் சிறந்தது.

2. இரசாயன முறை

கப்ரான் 1 அவுன்ஸ்/3 கலன் நீர் அல்லது பேமசோல் போட்டி (திரம்) (Tiram) 1 அவுன்ஸ்/ $2\frac{1}{2}$ கலன் நீர் மேற்கூறிய கலவை 14 சதுர அடி மேடைக்குப் போதுமானதாகும்.

### 7. விதைகளை முளைகட்டல்

விதைகளை ஈரச்சாக்கில் 24 மணி நேரம் பரப்பி முளை கட்டிய பின் நிழலில் உலர விட்டு விதைக்குக.

### 8 விதைத் தொற்று நீக்கம்

மேடையைத் தொற்று நீக்கம் செய்தால் இது தேவை இல்லை.

முளை கட்டிய விதைகளை 6 அவுன்ஸ் கப்ரான் ஒரு கி.கி. விதைக்கு என்ற விகிதத்தில் தொற்று நீக்குக.

### 9. விதைகளை மேடையில் விதைத்தல்

அ 4 அங்குல வரிசையில் ¼ அங்குல ஆழத்தில் விதை இடுக.

ஆ 40 கிறும் விதை ஒரு மேடைக்குப் போதுமானதாகும்.

இ. மணலால் விதையை மூடி அமர்த்துக

### 10. பத்திரக் கலவை இடுதல்

அ. வைக்கோலால் மேடையை மூடுக.

ஆ. விதைகள் 6 – 10 நாட்களில் முளைக்கும்.

இ. முளைத்த பின் வைக்கோலை அகற்றுக.

### 11 நீர் ஊற்றல்

அ காலையும், மாலையும் முளைக்கும் வரை நீர் ஊற்றுக.

ஆ. முளைத்த பின் தினசரி ஒரு தரம் நீர் ஊற்றுக.

இ கடினப்பட்ட பின்னர் நீரைக் குறைக்கவும்.

### 12 களை கட்டல்

அ. 2-ம் கிழமை கையால் எல்லாக்களைகளையும் பிடுங்குக,

ஆ 6 அவுன்ஸ் 13: 11: 6 மிளகாய்க் கலவை உரம் ஒரு மேடைக்கு இடுக.

### 13. நோய் பீடைப் பரிபாலனம்

அடி அழுகல் நோய் காணப்படின் டைகோனில் 1 அவுன்ஸ்/ 3 கலன் நீரில் அல்லது டைபெயரான் 1 அவுன்ஸ்/ 4 கலன் நீரில் கலந்து நாற்றுக்களின் தண்டின் அடிப்பகுதி நனையுமாறு விசிறவும்.

குருமன் நோய்க் காவிகளைக் கட்டுப்படுத்துக. இலை அரி புழுக்களைக் கட்டுப்படுத்துக.

### 14. கடினப்படுத்துதல்

அ. நாற்று நடுகைக்கு முன்னர் 3-4 நாட்களுக்கு நீரைக் குறைத்தல்


ஆ நிழலை முற்றாக அகற்றுக.

### 15. பிடுங்குதல்

அ. மேடையை நனைத்து நன்கு ஈரமாக்கிய பின்னர்,

ஆ. 28-30 நாட்களில் 16 செ. மீ. உயரமான போது பிடுங்குக.

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம்-ஷப்ரு



'ஷப்ரு' தரும் புதிய வட்டி வீதங்களை
கூர்ந்து நோக்குங்கள்!
ஆகா! பிரமாதம்! பரமதிருப்தி
என்றே ஆனந்திப்பீர்கள்!

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு எஸ் பாலசுப்பிரமணியம்
A I. B (Lond), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A I. B., (Lond), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்.

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ரவின் உறுதியும் அபரிதமான வளர்ச்சியும்
உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை
உறுதிப்படுத்துகின்றன.
வங்கியியலிலும் நிதியியலிலும்
சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள
எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன்
அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே
எமது பிரதான நோக்கமாகையால்
அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும்
சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து
திறமையான சேவைகளை வழங்குகின்றோம்

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,384 |
| வைப்பு | 27,737,553 | 58,970,365 | 100,577.492 |
| வங்கிக் கடன்கள் | 1.791.516 | 8,283.818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811.712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372.825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
பல்வேறு விசேட சலுகைகளையும்
வசதிகளையும் வழங்குகின்றது.
உங்கள் தேவைக்கேற்ப வட்டியை
மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில்
பணமாகவோ, காசோலையாகவோ அன்றி
வங்கிக் கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**SHABRA UNICO FINANCE LIMITED**
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL. 589310, 500576.
**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.**
யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073-24805

# மனிதருள் மாணிக்கம் நேரு

இந்தியாவின் மணிமுடி என வழங்கும் காஷ்மீர் காண்பவருடைய கண்களை யும், கருத்தையும் களிப்புறச் செய்யும் எழில் மிக்கது பாரதத்தின் உன்னதமான மலை மேரு பாரதத்தின் ஒப்பில்லாத் தலைவர் நேரு 'மேரு எங்கள் மலை; நேரு எங்கள் தலைவர்' என்று ஒரு முகமாகப் பாராட்டினர்

1889 ஆம் ஆண்டு இந்தியாவின் அலகாபாத்தில் மாபெருந் தலைவர் பண்டித ஜவகர்லால் நேரு பிறந்தார்.

பாழ்பட்டுக் கிடந்த பாரத மக்களுக்கு வாழ்வளிக்க வந்தார் அண்ணல் காந்திஜி. அண்ணலின் திருவாயால எனக்கு 'நேர் வாரிசு' என்று கூறி மனித குல மாணிக்கத்தை நமக்குத் தந்தார்.

தான் விரும்பியிருந்தால், அழகு மிக்க தனது ஆனந்த பவனத்தில் அளவற்ற செல்வத்தோடு அரசிளங்குமாரனைப் போல ஆனந்த வாழ்க்கை நடத்தியிருக்கலாம் ஆனால் முதலமைச்சர் நேரு, அதை விரும்பவில்லை; இன்பத்தைத் துறந்தார்; துன்பத்தை மேற்கொண்டார்; ஒரு முறையன்று; ஒன்பது முறை சிறைக்குச் சென்றார். விடுதலை வேள்விக்காக அயராது உழைந்தார். அரும்பணிகள் புரிந்தார் ஓயாத கிளர்ச்சிகள் ஓழியாத போராட்டங்களால் அடுத்தடுத்துச் சிறை சென்றார். சிறையே அவரின் வீடாயிற்று. விடுதலை பெற்ற பிறகும் அவர் நாட்டு மக்களின் மனதில் சிறையானார். அதுவே பதவிப் பொறுப்பு என்னும் சிறை இந்தச்சிறையில் அவருக்கு ஓய்வென்பதே கிடையாது

இவ்வாறு உலகப் பெருந் தலைவர்களிலே ஒப்பிலாத் தலைவராக ஓய்வறியாத உத்தமசீலனாக, நவபாரதத்தின் நாயகனாகத் திகழ்ந்த அவரை நினைத்து நாடுகளும், அத்தனை மனிதர்களும் அதிர்ச்சியடையும் படியாக அவர் 27.5.1964ல் மறைந்து விட்டார். (14. 11. 88இல் நூற்றுண்டு ஜனனதினம்)

★இ. அனுரதன்

# நாடுகளும் தலைநகரங்களும்

| | | |
|---|---|---|
| பங்களாதேஷ் | — | டாக்கா |
| பர்மா | — | ரங்கூன் |
| ஆப்கானிஸ்தான் | — | காபூல் |
| ஈரான் | — | தெஹ்ரான் |
| ஈராக் | — | பாக்தாத் |
| நோர்வே | — | ஒஸ்லோ |
| மொசாம்பிக் | — | மபுட்டு |
| நேபாளம் | — | காத்மண்டு |
| சிம்பாப்வே | — | ஹராரே |
| நிக்கரகுவா | — | மொனகுவா |
| ஸாம்பியா | — | லுசாக்கா |
| ஸ்பெயின் | — | மட்றிட் |
| தாய்லாந்து | — | பாங்கொக் |
| தென்னாபிரிக்கா | — | கேப்டவுன் |
| எல்சல்வடோர் | — | சான்சல்வடோர் |
| சூடான் | — | கார்டூம் |
| மெக்சிக்கோ | — | மெக்சிக்கோசிட்டி |
| அவுஸ்திரேலியா | — | கன்பெரா |
| சைப்பிரஸ் | — | நிக்கோஸியா |
| யூகோஸ்லாவியா | — | பெல்கிரேட் |
| லிபியா | — | திரிப்போலி |
| தென்கொரியா | — | சோல் |
| சீனா | — | பீக்கிங் |
| எகிப்து | — | கெய்ரோ |
| பிலிப்பைன்ஸ் | — | மனிலா |

தொகுப்பு: செ. தயாபரன்

# முரசொலி பூந்தோட்டம்

## அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..............................

வயது: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................

வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ....................

திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்)




# பாட்டி நல்ல பாட்டி

பாட்டி நல்ல பாட்டி பழங்கதைச் சீமாட்டி
பல்லில்லாத பொக்கைவாயால் பகிடிவிடும்பாட்டி
பஞ்சைப்போல தலைநரைத்த பழுத்த பழமூதாட்டி
பாக்குரலில் வெத்திலையை போட்டிடிப்பா பாட்டி

காலைநீட்டி இருப்பா கைத்தடி கொண்டுநடப்பா
கவலைபடா முகத்தா கடுக்கனுடைச் சிரிப்பா
எங்களைத் தினம் அணைப்பா இனிப்புப் பண்டம் அளிப்பா
இழுத்து முத்தம் கொடுப்பா இருத்தி மடியில் கதைப்பா

பாரதத்தில் ஐவராம் பாரதப் போர் நிகழ்ந்ததாம்
தருமர் வீமன் அர்ச்சுனன் நகுலன்சகாதேவனும்
தண்டு அம்பு சக்கரம் வாளும் வேலும் மோதுமாம்
தர்மம் வீரம் சத்தியம் சண்டையிலே வெல்லுமாம்

அக்கிரமம் அழியுமாம் அநியாயம் அகலுமாம்
நீதி மண்ணில் நிலைக்குமாம் நியாயம் ஒன்று பிறக்குமாம்
உண்மைபேசி வாழ்ந்திடில் உலகில் நன்மை கிடைக்குமாம்
பாட்டி கதைகள் சொல்லுவா கேட்டிருந்து மகிழுவோம்

செவ்வந்தி மகாலிங்கம்

# பூந்தோட்டம் அங்கத்தவர்கள்

இலக்கம் 91 இலட்சுமிகாந்தன் குணரத்தினம்
வயது 13, கிளிநொச்சி ம. ம. வித்தியாலயம் கிளிநொச்சி.

இலக்கம் 92 தர்ஷினி சண்முகநாதன்
வயது 10. தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி, தெல்லிப்பழை.

இலக்கம் 93 முத்துமோகனக் குருக்கள் கௌரி
வயது 07, சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை உருத்திரபுரம்

இலக்கம் 94 பொன்னம்பலம் சத்தியபாமா
வயது 09, இராமநாதபுரம் மகா வித்தியாலயம் கிளிநொச்சி.

இலக்கம் 95 அமிர்தலிங்கம் சுரேஸ்
வயது 13. இந்து மகா வித்தியாலயம் கனகபுரம் கிளிநொச்சி.

இலக்கம் 96 மகாலிங்கம் சுலைமகள்
வயது 10, முருகானந்த மகா வித்தியாலயம் கிளிநொச்சி.

இலக்கம் 97 பத்மினி செல்வராசா
வயது 08, கமலாசனி வித்தியாலயம் மட்டுவில்.

இலக்கம் 98 திலகேஸ்வரி இரத்தினம்
வயது 13 மகளிர் மகா வித்தியாலயம் சாவகச்சேரி.

இலக்கம் 99 காயத்திரி கதிர்காமநாதன்
வயது 09, சைவத் தமிழ் வித்தியாசாலை உரும்பராய்.

இலக்கம் 100 குமாரசாமி அகிலன்
வயது 12, இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பாடசாலை வட்டக்கச்சி.

# 1+1=2

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஒற்றுமையில் நன்மை உண்டு
இரண்டும் ஒன்றும் மூன்று
இரக்கம் என்றும் நன்று
மூன்றும் ஒன்றும் நான்கு
படிக்க வேண்டும் நன்கு
நான்கும் ஒன்றும் ஐந்து
தீமை செய்ய அஞ்சு

செ செல்வதாசன்
கொக்குவில்

# விலங்குகள் விதம் விதம்-7 புலி

புலி கூடுதலாக சூரிய ஒளியை விரும்பாது அதனால் புலி பெரும்பாலான வேளைகளில் தூங்கிக் கொண்டிருக்கும். அது பெரும்பாலும் தன்வாலை இடமிருந்து வலமாக வே அசைக்கும்.

புலி பசித்தாலும் புல்லைப் புசிக்காது என்பர். ஆனால் புலி புல்லை மருந்திற்காக உண்ணுமாம்

புலி எப்போதும் கூட்டமாக வாழ்வதில்லை தனக்கென 20 முதல் 100சதுர கிலோ மீற்றர் வரையான இடத்தை ஒதுக்கி எல்லை இட்டு வாழும் அதன் எல்லைக்குள் வரும் விலங்குகளை அதுவே உண்ணும், வேறு புலிகள் அவ்எல்லைக்குள் வர முடியாது தன் எல்லை அதுவெனக் காட்ட எல்லையில் சிறுநீரைக் கழித்தும் மரங்களில் அதன் வாலின் அடியில் சுரக்கும் திரவத்தைப் பூசியும் யுக்திகள் செய்யும். அதனைக்கண்ட வேறு புலிகள் அந்த எல்லைக்குள் நுழையா.

காட்டில் சூரிய ஒளிக்குப் பயந்து குகைகளில் வசிக்கும் புலிக்கு குளியல் என்றால் அலாதி விருப்பம் மரம் ஏறுவதில் அவ்வளவாக பயிற்சி இல்லாதது புலி. ஆனால் 20 அடி அகலத்தைத்தாண்டும் திறன் புலிக்குண்டு

புலி வேட்டைத்தந்திரம் கொண்டது ஒரு பிராணியை புலி வேட்டையாடியதும் அதன் குரல் வளையைக்கடித்தே கொல்லும் புலி ஏற்கனவே இறந்த விலங்குகளை உண்ணுவதுதான் வேட்டை ஆடியே உண்ணும் இயல்பு கொண்டது புலி வேட்டை ஆடுவது அதிகமாகமான், பன்றிகளைத்தான். யானைக்குட்டி, காண்டா மிருகம் ஆகியன வற்றையும் புலி வேட்டையாடும்

புலிக்கு எவ்வளவு பசி இருந்தாலும் தன் குட்டிகளை விட்டு உண்ணாது இறச்சித் துண்டுகளை குட்டிக்குப் போட்டுவிட்டு அவை திருப்தியாகச் சாப்பிட்ட பின்தான் அது உண்ணும் புலி ஒரு முறைக்கு 35 கிலோ இறைச்சியை உண்ணும்.

புலி ஒரு தடவையில் நான்கு குட்டிகளை ஈனும் குட்டியை ஈன்றதும் ஆண் புலியை கிட்ட அணுகவிடாது. முதலில் குட்டிக்கு புலிப்பாலே உணவாகும் பின் மாமிசம் உண்ணப் பழக்கும்

மனிதரை ருசி பார்த்த புலிக்கு விலக்குகளைப் பிடிக்காது. புலிக்கு வெள்ளையாக எதைப்பார்த்தாலும் பயம். புலிக்கும் சிங்கத்திற்கும் பிறந்த குட்டிகள் பெரும்பாலும் புலியையே ஒத்திருக்கும் இவை 'டைகன்' என அழைக்கப்படுகின்றன டைகன்கள் அனேகமாக குருடாகவே பிறக்கின்றன.

உலகிலேயே மிகப்பெரிய புலிகள் சைபீரிய காட்டில் வாழ்கின்றன வெண்மை நிறத்திலும் புலிகள் உள்ளன. இவற்றிற்கு வரிகள் கிடையாது

அதிகளவு தாய்ப்பாசம் கொண்ட புலியை இரத்தத்தைக் காட்டாமல் வீடுகளில் வளர்த்தால் மிகவும் நன்றி விசுவாசத்துடன் பழகும். தாய்ப்பாசம் அதிகம் கொண்டதுதான் புலி

தி தவபாலன்




# விளையாட்டுப் போட்டிகளில்
# பெண்கள் பங்கு அதிகரிப்பு

போட்டி உடற்பயிற்சி, விளையாட்டுத் துறையில் மனிதன் சிரத்தை கொண்ட ஆரம்பத்தில், பெண்ணுக்கு அங்கு இடமே இருந்ததில்லை. இது மனித சமுதாயத்தின் துர்ப்பாக்கியம் என்றே எண்ணத் தோன்றுகிறது. இன்று இத்தகைய துறைகளில் மாதரின் ஆற்றலைக் காண்போர் இதனை ஆடசேபிக்கமாட்டார்கள்.

நவீன ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் தந்தை எனப் பலரும் போற்றும் பாறன் பியேர் த கூபேர்த்தன் பிரபு: ''இப்போட்டிகளில் பெண்களின் பங்கு ஒன்றே ஒன்று வெற்றியீட்டும் (ஆண்) விளையாட்டு வீரர்களைப் பாராட்டு முகமாக அவர்களுக்கு மாலை அணிவது.'' என்று கூறிச் சென்று இப்பொழுது ஏறத்தாழ ஒரு நூற்றுண்டு ஆகப்போகிறது. ''மாதர் தம்மை இழிவுசெய்யும்'' இவ் வபிப்பிராயத்தை எதிரொலிப்பதுபோலரெனிஸ் உலக சம்பியன் ஸ்ரன் ஸ்மித்: ''ஒரு பெண்மணி வீட்டோடு தங்கி, குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும்; பெண் பிறந்தது அதற்காகத்தான்'' என்றூர். இந்தக் காலம் மலையேறிவிட்டது. ''லண்டன் ரைம்ஸ்'' பத்திரிகையும் அண்மையில் இதனை ஆமோதித்துக் கருத்து வெளியிட்டு உள்ளது.

இப்பொழுது சில தசாப்தங்களாக,விளையாட்டுப் போட்டிகளில் பெண்கள் எய்தியுள்ள சிறப்பைக் கண்டால், மேற்கூறிய அபிப்பிராயம் வெளியிட்டவர்கள் வெட்கித் தலை குனிந்து தமது கூற்றினை வாபஸ் பெறத் தயங்கார்கள்.

1972 ஒலிம்பிக்ஸ் போட்டிகள், அக்கால ஜேர்மானிய மியூனிச் மாநகரில் நடந்தேறின. 'பென்ரத்லோன்' எனப்பட்ட ஐந்து நிகழ்வுத்தொகுப்பில் பங்குபற்றி முதல் இடத்தையும் தங்கப் பதக்கத்தையும் வென்றெடுத்த மேரி பீட்டேர்ஸ் ஓர் அயர்லாந்து யுவதி. தனது தகப்பனுரின் தைரியமூட்டலே அப் பெருவெற்றியைத் தமக்குப் பெற்றுத் தந்தது என அப் பெண் பின்னர் கூறினுர். அவ்வாண்டு ஒலிம்பிக்ஸ்ஸில் அயர்லாந்து கைப்பற்றிய ஒரேயொரு தங்க 'மெடல்' மேரியினுடையது மட்டுமே.

## பெண்பிள்ளைக்கு நவீன பரிசு

பையன்களுடன் ஓடியாடி விளையாடுவது, கிடங்குகளைத் தாண்டிப் பாய்வது, மரங்களில் தாவி ஏறுவது. வயல் வரம்புகள்மீது குதித்தோடித் திரிவது, இவையெல்லாம் மேரி பீட்டேர்ஸின் சர்வ சாதாரண, நாளாந்த நடவடிக்கைகள்.

தந்தை பீட்டேர்ஸ் தமது மகளின் பதினுரும் பிறந்தநாட் பரிசாக வழங்கியது (சிரிக்காதீர்கள்) மண். ஒரு 'லோட்' கடற்கரை மணல், நீளப் பாய்ச்சற் பள்ளம் ஒன்று அமைத்து, நிரப்புதற்காக அவளோ, அழகான ஒரு புத்தாடை கிடைக்கும், என்றிருந்தாள். அடுத்த வருட ஜனனதின அன்பளிப்பு, சீமெந்துக் குவியல்: குண்டு எறியும் வட்டம் அமைக்க அது பயன்பட்டது.

பீட்டேர்ஸ் 'சீனியர்' ஏனைய தகப்பன்மார் போன்றவரலல; அவர்களினின்றும் வேறுபட்டவர். எந்தப் பெண்பிள்ளைக்கும் பிடித்தமானது உயர் குதிச் சப்பாத்துச் சோடி. ஆனுல், அதைவ்டுத்து, விலை மிககதானுலும், ஆணிகள் பதித்த (SPikes) ஓடும் சப்பாத்துகளையே மகளுக்கென அவர் வாங்கிவருவார். அப்பிள்ளை வலிமை வாய்ந்த உடலுறுதி பெற்றவராக, ஆயினும் பெண்மை மாருதவராக, வளர்ந்துவரல் வேண்டும் என அவர் விரும்பினுர். அவரது இந் நெடுநாளைய வேணவா, காலகட்டத்தில் ஒலிம்பிக்ஸ் தங்க மெடல் உருவில் பலன் ஈந்தது. இத் தகவல்களைத் தரும் லண்டன் 'ரைம்ஸ்,' மேலும் பல கூறுகிறது

அகில உலகிலும் உதைபந்தாட்ட மைதானங்களுள் நடுநாயகமாக விளங்குவது 'வெம்ப்ளி' ஸ்ரேடியம்.' அங்கேஆண்கள் காற் பந்தாட்டக் கோஷ்டிகளுக்கு உள்ள அதேயளவு உரிமை, அதிகாரம், பெண்கள் கோஷ்டிகளுக்கும் உண்டு. அனைத்துலக மட்டத்தில், கிரிக்கெட் முதலாம் கோஷ்டி விளையாட்டுகளை, கிரமமாகப் பெண்களும் ஆடிவருகின்றனர். குதிரைப் பந்தய ஓட்டத் துறையில், (Trainer) பரி பயிற்றுநர் ஸுஸான் பிகொட், லேடி ஹெறியர், என்போரின் பெயரைக் கேள்விப்படாதோர் உளரோ?

### வியப்பிலாழ்த்திய ஒரு வீராங்கனை

இரண்டாவது உலக யுத்தம் முடிந்ததும். போரினுற் சோர்வுற்றிருந்த லண்டன் மாநகரில், *1948* ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெற்றன. அங்கு சகலரையும் வியப்பில் ஆழ்த்தியவர், ஒல்லாந்துதேச வீராங்கனை, ஃபேனி பிளாங் கேர்ஸ் கூன். ஒன்று இரண்டல்ல, நான்கு தங்க மெடல்களை வென்றெடுத்த இந்த டச்சுப் பெண்மணி, இரண்டு குழந்தைகளின் தாயார் ஆவர். (கதையோடு கதையாக, இதுகாலம் வரை இலங்கை சுவீகரித்துக் கொண்டது, ஒரேயொரு ஒலிம்பிக் (வெண்கல) பதக்கத்தை மாத்திரமே. இது டன்கன் வைற் என்ற பறங்கியருக்கு வழங்கப் பெற்றது ) வெற்றிவாகை சூடித் தாய்நாடு மீண்ட Fanny Blankers koen-உக்கு நன்றிகூர்ந்து நெதர்லாந்து அரசின் அன்பளிப்பு, ஒரு பைசிக்கிள் ஆகும்.

*1972* – மியூனிச் ஒலிம்பிக்ஸ்ஸில் 'ஜிம்ஞஸ்ரிக்ஸ்' நிகழ்வுகளிற் பங்குபற்றித் தங்கப் பதக்கம் ஈட்டிய ரஷ்ய மங்கை ஒல்கா கோர்புட் (போலியோமயெலைட்டிஸ் எனும் போலியோ)சிறுபிள்ளை வாதத்தாற் பீடிக்கப்பட்ட அமெரிக்க நீகிரோச் சிறுமி வில்மா ருடோல்ஃவ், இழந்த உடல் நலத்தை மீண்டும் சிறப்புறப் பெற, திடசங்கற்பம் பூண்டார். படிப்படியாகத் தமது உடலைப் பயிற்றி, இறுதியில் பல ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை இவர் பரிசாகப் பெற்ரூர். குறுகிய தூர, விரைவோட்டப் போட்டிகளில் இவை அவருக்கு வழங்கப் பெற்றன.

*1984*, லொஸ் அஞ்ஜெலீஸ் ஒலிம்பிக்ஸ்ஸில் நானூறு மீட்டர் (ஹேர்ட்ல்ஸ்) தடையோட்டப் போட்டியில் முதற்பரிசு (தங்கப் பதக்கம்)கிடைத்தது, மொறெக்கோ நாட்டின் நவால் எல் மௌத்தவாக்கில் எனும் யுவதிக்கு இவரே இஸ்லாமிய நாடொன்றில் இருந்துவந்து ஒலிம்பிக் பதக்கம் பெற்ற முதலாவது பெண்மணியானுர்.

உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகளில் மங்கையரின் திறமை வளர்ந்து கொண்டே செல்லக் காண்கிறேம். 'மெல்லியலார்' மரதன் ஓட்டத்திலும் பங்குபற்றுகின்றனர். இத்தகைய துறைகளில் எல்லாம் ஆண்கள் பெண்பாலார்க்கு விதித்த வெளிப்படை, மறைமுகத் தடைகள் ஒவ்வொன்றுகத் தகர்ந்து வீழ்கின்றன நூறு மீட்டர், இரு நூறு மீட்டர் போன்ற (ஸ்ப்றின்ற்) குறும் தூர, உச்சவேக நிகழ்வுகளில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாகக் கலந்து போட்டியிடும் வேளை, இன்றே நாளையோ எனும்படி நம்மை அணுகி வருகிறது.

## கலாநிதி...

...5ஆம் பக்கத் தொடர்ச்சி

கொண்டு இப் பெயர்கள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். புவிவெளி உருவவியலாளர் உதவி இதில் மிகவும் அவசியமாகும்.

இத்தகைய நூலின் பயன்பாட்டினை ஆசிரியரே தன்னுடைய உரையிலே ''ஒரு நாட்டின் வரலாற்றுண்மைகளையும், பண்பாட்டுச் செய்திகளையும் புதைபொருட் சான்றுகள், கல்வெட்டுக்கள், கட்டிட, சிற்ப ஓவியங்கள், இலக்கியங்கள் எடுத்து இயம்புவன போன்று, இடப் பெயர்களும் வரலாற்ருய்வுகளுக்கு ஆதாரமாகின்றன. இடப்பெயராய்வின் மூலம் இடங்களின் புவியியல்பு.பிறநாட்டார்தொடர்பு. அரசியல் நிகழ்வுகள், மொழிமாற்றம் முதலாம் விடயங்களை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்துறைப்பட்ட மாணவர்களுக்குப் பயன்படத் தக்க இந் நூல் ஈழத்துத் தமிழியல் வளர்ச்சிக்குத் தன்னுலான பங்களிப்பினைச் செய்கின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் பல்வகைப்பட்ட ஆய்வு முயற்சிகளிலே இதுவும் ஒன்று என்பதைப் பலரும் அறியும் வாய்ப்பும் இந் நூல் மூலம் ஏற்படுகின்றது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

## 'ஸ்கூப்ஸ்'...

...5ஆம் பக்கத் தொடர்ச்சி

இக்காரியத்தின்பால்கவனம் பதித்த பத்திரிகைகள் மிகச் சிலவே அவற்றுள் ஒன்று, ''த ரைம்ஸ் ஒவ் இந்தியா'' இதையிட்டு அதன் ஆசிரிய தலையங்கம் குறிப்புரை வழங்க வேண்டியதாயிற்று: இந்திய சமுதாயம் சுதந்திரமானது, ஜனநாயகவாரியானது, ஒட்டுக் கேட்டலைச் சட்டபூர்வமானது ஆக்க முற்படும் இந் நடவடிக்கை இந்திய சமுதாய மரபுக்கு ஒரு மிரட்டல் ஆகும். ஏனெனில், தொலைபேசி ஒட்டுக் கேட்டலையும், அச் சம்பாஷணை வார்த்தைப்பதிவுகளைப் பத்திரிகைகளிடம் கையளித்தலையும் ஒரு தடவை ஏற்றுச் சட்டபூர்வமானது ஆக்கிவிட்டோமானுல், அதன் பயனுக நேரக்கூடிய தறுகுறும்புகளைக் கற்பனைபண்ணிப் பார்த்தாலே மனம் நடுங்குகிறது.

### கல்விமான்கள் கருத்து

முதன் முதலில் இவ்வுரையாடல் அறிக்கை பிரசுரமாகி ஆறு நாட்கள் கடந்த பின், தாமதமாக, ''டெல்லி பல்கலைக்கழகக் கல்விமான்கள்'' இச் சம்பவத்தையிட்டு விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுத்தனர். சுதந்திரத்தின் மீதான ஒரு தாக்குதல் இது, என்றனர் அவர்கள்.

தொலைபேசி ஒட்டுக்கேட்டல் சட்டத்திற்கு முரணுனது. ஆனுல், அரசியல்வாதிகளின் நோக்கத்திற்கு அது சாதகமாக அமையும் பட்சத்தில் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளக்கூடும். ஆனுல், பத்திரிகைகளின் குறிக்கோள் நிறைவேற வேண்டுமாயின், அக் குறிக்கோளுக்கு அவை தொடர்ந்தும் பற்றுறுதி வாய்ந்தவையாக இயங்க வேண்டுமாயின், அவற்றின் பொறுப்பு அதைவிட உயர்ந்தது அ பொறுப்போ மலைமேல் விளக்கு என, துலாம்பரமாகத் தெரிவது.

தொலைபேசி ஒட்டுக்கேட்பது தவறுனதாயின், அச்செயலே தவறுனது ஆகும் ஒரு பத்திரிகையின் ஆசிரிய கொள்கையை ஆதரிக்கும் 'ஸ்கூப்' பாக இருந்தாலுங் கூட, தவறுனதாகில் அதனைப் பிரசுரிப்பதைத் தவிர்த்துக் கொள்வதே சிலாக்கியமானது.

அவசரகாலச் சட்டப் பிரகடனம், அனேக பத்திரிகைகளின் நற்பெயருக்குக் களங்கம் விளைத்தது. அதுமுதற் கொண்டு, அவை இழந்த தமது கீர்த்தியை மீண்டும் ஈட்டிக்கொள்ள மிகச்சிரத்தையுடன் முயன்று வருகின்றன. இன்னுமொரு பொதுத் தேர்தல் அணுகி வருகிறது. எதிர்க் கட்சிகளோ வெற்றி தமதே என்கின்றன. இந் நிலையில் பத்திரிகைகள் முன்னரைவிட இருமடங்கு சாவதானமாகச் செயற்பட வேண்டியனவாக உள்ளன.

பத்திரிகைகள் தமது தொழிலை, கடமையை சரிவர, யோக்கியமாக செய்யவில்லை. அதற்குப் பதிலாக அவை அரசியலாட்டம் ஆடினவே தவிர வேறில்லை. எனவே, நாட்டின்பால் அவை தமக்கு வாய்ந்த கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டன இவ்வாறு மக்கள் மனக்குறைப் பட்டுக்கொள்ள தேர்தல்கள் ஒரு வாய்ப்பு அளித்தலாகாது.


## ஓராண்டு உள்ளக் குமுறல்

(09.11.88 ல் வெளிவர வேண்டியது)



நிறைவு : 10-5-68 மறைவு : 9-11-37

### செல்வன் செல்வநாயகம் பஞ்சரத்தினம்

(ராஜன்)

சிவகுல வீதி, உரும்பராய்

ஆவிபோய் எங்கள் ராஜன் ஆண்டும் ஒன்றுன தையோ
காவியே சுமந்து உன்னைக் காவடி எடுத்த கையால்
பாவியேம் உண்ப தெல்லாம் பாற்கடல் நஞ்சே யப்பா
கூவியே அழைக்கும் எம்மைக் கூட்டியே நீயும் செல்வாய்.

அண்ணியைப் பார்க்க வென்று ஆசையோடிருந்தா யன்று
எண்ணிய வாறு உலகில் எல்லாமே நடப்ப தில்லை
மண்ணினில் வாழ்வா யென்று மனத்திஞல் கோட்டை செய்தோம்
விண்ணையோ விரும்பிச் சென்றுய் விதியுனக் கிதுவோ ஐயா.

மண்ணுக்கு மழைவேண் டாம்மக னேயுன் மறைவி ஞலே
கண்ணுக்கு ஒய்வின்றி நீரைச் சிந்தும் மாதா மனமாற
விண்ணுக்குப் போன நீவிரைந் தேவந்து விளையாடும் திருநாளை
எண்ணுக் கணக்கிலே காத்திருந்தோம் இறைவனே கருணகரா.

சிவகுல வீதி,
உரும்பராய்.

குடும்பத்தினர்

11050

## முரசொலி கேடய கிரிக்கெட்

# கோக்குவில் அணியினரின் அபார விளையாட்டு

முரசொலி கேடயத்துக்காக ஜொனியன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் இரண்டாவது ஆண்டு நடாத்திய ஆறு வீரர்களைக் கொண்ட அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் 'ஏ' அணியினர் சம்பியனாக வந்து முரசொலி கேடயத்தை இவ்வருடம் கைப்பற்றிக் கொண்டனர்.

மேற்படி கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இம் மாதம் இருபத்தி மூன்றாம் திகதி சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் பெருந்தொகையான ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

முதலில் கால் இறுதியாட்டத்தில் கடைசி அணிகளுக்கான போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் கொக்குவில் 'பீ' அணியும், கிருஸ்கொப்பர்ஸ் 'கிறீன்' அணியும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் 'பீ' அணி ஒரு விக்கெட்டை இழந்து எண்பத்தியொன்பது ஓட்டங்களைப் பெற்றது, திரு. உமாசங்கர் ஆட்டமிழக்காமல் முப்பத்தாறு ஓட்டங்களை தமது அணிக்கு பெற்றுக் கொடுத்தார். அடுத்து துடுப்பெடுத்தாடிய கிருஸ்கொப்பர்ஸ் 'கிறீன்' அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து நாற்பத்தியிரண்டு ஓட்டங்களை மட்டுமே பெற்றது. திரு. தர்மராஜா இதில் பத்தொன்பது ஓட்டங்களை பெற்றார். இதன் மூலம் கொக்குவில் 'பீ' அணி வெற்றி பெற்று அரை இறுதி ஆட்டத்தில் பங்கு பற்ற தகுதியடைந்தது.

அடுத்ததாக அரையிறுதியாட்டங்கள் ஆரம்பமாகின. முதலில் கொக்குவில் 'ஏ' அணியுடன் 'ஷப்ரு' 'ஏ' அணி மோதிக்கொண்டது. கொக்குவில் 'ஏ' அணி இரண்டு விக்கட்டுக்களை இழந்து ஐம்பத்தியொரு ஓட்டங்களைப் பெற்றது. திரு. நற்குணேந்திரன் பதினேழு ஓட்டங்களையும், திரு பாலகுமார் ஆட்டமிழக்காமல் இருபத்தொரு ஓட்டங்களையும் பெற்றனர். ஷப்ரு அணி இருபத்தொரு ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல விக்கட்டுக்களையும் இழந்தது. திரு. முருகவேள் இதில் பதின்மூன்று ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். கொக்குவில் 'ஏ' அணி முப்பத்தொரு ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் அடுத்ததாக கொக்குவில் 'பீ' அணியுடன் ஜொனியன்ஸ் 'ஏ' அணி மோதியது. கொக்குவில் 'பீ' அணியினர் ஒரு விக்கட்டை இழந்து நாற்பத்தியெட்டு ஓட்டங்களைப் பெற்றனர். திரு. விஸ்வநாத், திரு. கிருபானந் ஆகிய இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே இருபத்தேழு, பன்னிரண்டு ஓட்டங்களைப் பெற்றனர். அடுத்து ஆடிய ஜொனியன்ஸ் 'ஏ' அணியினர் ஒரு விக்கட்டை இழந்து நாற்பத்தொன்பது ஓட்டங்களைப் பெற்றனர். திரு. சதீஷன் ஆட்டமிழக்காமல் இருபத்தொரு ஓட்டங்களையும், திரு. கணேஷ் பஞ்சன் ஆட்டமிழக்காமல் பதினாறு ஓட்டங்களையும் பெற்றனர். ஜொனியன்ஸ் 'ஏ' அணி நான்கு விக்கட்டுக்களால் இப்போட்டியில் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் கொக்குவில் 'ஏ' அணியும் ஜொனியன்ஸ் 'ஏ' அணியும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் 'ஏ' அணி இரண்டு விக்கட்டுக்களை இழந்து அறுபது ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. திரு. நற்குணேந்திரன் இருபத்தொரு ஓட்டங்களையும், திரு துஷ்யந்தன் ஆட்டமிழக்காமல் இருபத்தி ஐந்து ஓட்டங்களையும் பெற்றனர். அடுத்து துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் 'ஏ' அணி இரண்டு விக்கட்டுக்களை இழந்து நாற்பத்தியெட்டு ஓட்டங்களைப் பெற்றது. ரவீந்திரா ஆட்டமிழக்காது இருபத்தி மூன்று ஓட்டங்களையும், திரு. கணேஷ் பஞ்சன் பதின்மூன்று ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். கொக்குவில் 'ஏ' அணி பன்னிரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்று முரசொலி கேடயத்தை சுவீகரித்தது. ஜொனியன்ஸ் 'ஏ' அணி றன்னர் – அப் கிண்ணத்தைப் பெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக திரு. நற்குணேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். சென்றலேட்டுடன் நடந்த போட்டியில் ஒரு ஓட்டத்தை மட்டுமே கொடுத்து இரண்டு விக்கட்டுக்களை இவர் வீழ்த்தியிருந்தார்.

சிறந்த தனிநபர் துடுப்பாட்ட வீரருக்கான பரிசு திரு. சி. கிருபானந்தனுக்கு வழங்கப்பட்டது. ஜொனியன்ஸ் 'சீ' அணிக்கு எதிரான போட்டியில் இவர் நாற்பத்திரெண்டு ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

ஆகக்கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணிக்கான பரிசு கொக்குவில் 'ஏ' அணிக்கு கிடைத்தது. மேற்படி அணி ஜொனியன்ஸ் 'சீ' அணியுடன் நடத்திய மோதலில் ஒரு விக்கட்டை இழந்து அறுபத்தொரு ஓட்டங்களைப் பெற்றது.

மொத்தம் இருபத்தொரு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய முரசொலி கேடயத்துக்கான இவ் வருட கிரிக்கெட் போட்டியில் மிகச்சிறந்த வீரருக்கான பரிசு கொக்குவில் 'ஏ' அணியைச் சேர்ந்த திரு. சீ. நற்குணேந்திரனுக்கு வழங்கப்பெற்றது.

மேற்படி போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி 23. 11. 88 புதன் கிழமை பிற்பகல் சென். ஜோண்ஸ் 'கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது ஜொனியன்ஸ்' ஸ்போர்ட்ஸ் கிளப் பிரமுகரும் ஷப்ரு நிறுவன பொது முகாமையாளருமான திரு. எஸ். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் முரசொலி நிறுவன ஆளுநர் நாயகம் திரு. ம. சிவராசா வெற்றி பெற்ற வீரர்களுக்கும், வெற்றி பெற்ற அணிகளுக்கும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். முரசொலி பிரதம ஆசிரியர் திரு. எஸ் திருச்செல்வம், ஜொனியன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் பிரமுகர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் இங்கு உரையாற்றினர்.

# பலஸ்தீன சுதந்திர அரசின் எதிர்காலம் எப்படி அமையும்?




பலஸ்தீன இடைக்கால அரசாங்கம் பிரகடனம் செய்யப்பட்டதையடுத்து ஐக்கிய நாடுகள் சபையில் அதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சியில் பலஸ்தீன விடுதலை இயக்கமும் தீவிரவாத அரபு நாடுகளும் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளன. இதன் மூலம் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு மேலும் ஒரு மாபெரும் அரசியல் வெற்றியைப் பெற்றுக் கொடுக்கலாம் என அரபுலகின் ராஜதந்திரிகள் கருதுகின்றார்கள்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாஸிர் அரபாத் ஐ நா. சபையின் கூட்டத்தில் நேரடியாகக் கலந்துகொண்டு உரையாற்றுவதன் மூலமாக மட்டுமே அரசியல் ரீதியாக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அரபு நாடுகள் கருதுகின்றன. அதனைச் சாதிப்பதற்கான முயற்சிகளிலும் அவைஇறங்கிவிட்டன ஆனால் அரபாத்தின் ஐ நா. சபை உரையை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பதில் இஸ்ரேல் உறுதியாக உள்ளது இவை இரண்டுக்கும் இடையே எந்த ஒரு முடிவையும் உடனடியாக எடுக்க முடியாத நிலையில் அமெரிக்கா திண்டாடுவதையே இன்று காணக்கூடியதாகவுள்ளது.

ஐ. நா. சபையில் உரையாற்ற அமெரிக்கா செல்வதற்கான 'விசா' யாஸிர் அரபாதுக்கு வழங்கப்பட வேண்டுமென பல தீவிர அரபு நாடுகள் அமெரிக்காவுக்கு நெருக்கடிகொடுக்கத் தொடங்கியுள்ளன. சவுதி அரேபிய மன்னரின் நேரடி உத்தரவின் பேரில் வாஷிங்டனிலுள்ள சவுதி தூதர் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் சுல்ஸை சந்தித்து அரபாத்துக்கு'விசா'வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்,

இதன் பின்னர் எகிப்து உட்பட பல அரபு நாடுகளின் தலைவர்களும்அமெரிக்க உயர் அதிகாரிகளைச் சந்தித்து இக் கோரிக்கையை வலியுறுத்தினார்கள். எகிப்தின் வெளியுறவு அமைச்சர் இது தொடர்பாக அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் பேசுவதற்காக விரைவில் நியூயார்க் செல்லப்போவதாகத்தெரிவித்துள்ளார். அரபு நாடுகள் மேற்கொள்ளும் இத் தீவிர முயற்சியைப் பார்க்கும் போது அரபாத்துக்கு 'விசா' வழங்குவதென்ற முடிவுக்கேஅமெரிக்கா வரவேண்டும் என்றே தோன்றுகின்றது இது தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு இம் மாத முடிவுக்குள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் படலாம்.

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ஜோர்ஜ் புஷ்ஷின் மத்திய கிழக்கு ஆலோசகரான டேவிட் றேஸ் என்பவரே அரபாத்துக்கு 'விசா' வழங்க வேண்டும் என்பதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றார் எனினும் அமெரிக்க அதிகாரிகள் இது தொடர்பாக இதுவரை எவ்விதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை. இது தொடர்பான இறுதி முடிவை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் சுல்ஸ் மேற்கொள்வார்.

'ஆர்பி'

---

### முற்போக்குக்கு..

... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

களுக்கு உதவியுள்ளார் பேராசிரியர்கள் நடராசா, கே.எம். டி. சில்வா, கலாநிதி குமாரி ஜயவர்த்தன ஆகியோரின் ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு ஜேம்ஸ் இரத்தினம் ஆற்றியுள்ள உதவிகள் பற்றி அவர்களே எழுதியிள்ளனர்.

சேர்அலெக்ஸாண்டர் பொன்னம்பலம் அருணாசலம்,இராமநாதன் ஆகியோர்களது சேவை பற்றியும் வட்டுக்கோட்டைச் செமினரியின் கல்விச் சேவை பற்றியும் அதிகாரபூர்வமான அறிவாழம் கொண்ட திரு. இரத்தினம், பொன்னம்பலம் அருணாசலத்தின் வாழ்க்கை வரலாற்றைச் சிறு நூலாக வெளியிட்டுள்ளார். இலங்கை வரலாற்றுக்கான பல மூலச் செய்திகளை இந்திய அமெரிக்கப் பல்கலைக் கழக நூல் நிலையங்களிலிருந்து தேடிப் பெற்றுள்ளார். இத் தகவல்களை ஆதாரமாகக் கொண்டே பல ஆராய்ச்சி நூல்கள் எழுதப்படலாம்.

ஜேம்ஸ் இரத்தினத்தின் அறிவார்வம் அவரை அகழ்வராய்ச்சி முதல் மானிடவியல் வரை பல முறைகளில் ஈடுபடுத்தியுள்ளது. யாழ்ப்பாணத் தொல் பொருட் கழகத்தின் நடப்பு வருடத் தலைவராக விளங்கும் அவர் ஆற்றிய தலைமைப் பேருரை இத்துறையின் வரலாற்றை அறிவதற்கான கருவூலமாகும்.

ஜேம்ஸ் இரத்தினம்அவர்களின் நூல் நிலையம் அறிஞர்களிடையே பெரும் பெயர் பெற்றது ஹொரேஸ் வால்ப்போல் என்னும் அறிஞரின் கடிதங்களிலொருபகுதி இவரிடமிருந்தது. பிரபல அமெரிக்கப் பல்கலைக்கழகமான யேல் பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பாக அதனை இரத்தினம் வழங்கினர். இவரது நூலிற் பெரும்பகுதியாழ்ப்பாணக் கல்லூரி மூலமாக இன்று யாழ்வளாக நூல் நிலையத்தைச் சென்றடைந்துள்ளது இது அந் நூல் நிலையத்துக்குக் கிடைத்துள்ள அருநிதியாகும்.

நூலார்வம், ஆராய்ச்சியார்வம், அறிவைப் பகிர்ந்து கொள்ளுவதிற் காணும் இன்பம் ஆகிய பண்புகள் இரத்தினத்தைப் பல்கலைக்கழகத்து ஆராய்ச்சியாளர்களது ஆத்ம மித்திரனாக்கியுள்ளது.

**நன்றி ஜேம்ஸ் இரத்தினம் எழுபதாவது ஆண்டு நிறைவு பாராட்டுமலர்-1975**

### திருவிழா ..

...7 ஆம் பக்கத் தொடர்ச்சி

பிற்காலத்திலே எழுந்த அருணகிரிநாதர், அபிராமிபட்டர் பாடல்கள் போன்றவை இப் பக்திப் பாடல்கள் எண்ட பேரிலே எதையெதையோபாடுறாங்கள் கேக்கவே சங்கடமாயிருக்கு. அதுகூடப் பறவாயில்லை. சில கோயில்களிலே சினிமாப்பாடல்களையே அலறவிடுறாங்கள் இருபத்தி நாலு மணி நேரமும்!'

'சினிமாப் பாடல்களைப் போடுறது பிழைதான்!'

சப்பரத்திலிருந்து சுவாமியை இறக்கி, ஊஞ்சலாட்டியபடி உள்ளே கொண்டு சென்றார்கள். பின்பு பூசை நடந்தது.

பிரசாதத்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டோம் கோயில் முழுவதிலும் மின் விளக்குகள் அழகாக எரிந்து கொண்டிருந்தன

'கோயில் நல்ல பிரகாசமாயிருக்கு' என்றேன்.

'ஒளிமயமாயிருக்கு!' என்றான் நண்பன். ●

### தமிழிலக்கிய .

... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

கட்டுரையாளர்களும், சிறுகதை எழுத்தாளர்களும், இளம்கவிஞர்களும் தமிழ் இலக்கியப் பெருங்கடலில் கலந்து கொண்டேயிருக்கிறார்கள்

இந்த மரபு நெறியில் கதிரமலையானின் மரபுவழி பக்திப் பனுவல்களும் இத் துறையை மேலும் அணிசெய்யக் காணலாம். அண்மையில் வெளியான ஈழத்தில் அறுபது என்னும் நூல் ஆசிரியரின் (ச வடிவேலு) பணி ஒரு திருப்பு முனையாகும் ஈழத்து இலக்கிய வரலாற்றின் தனித்துவ பாணியொன்றை ஊரெழு தமிழ் மொழிக்கு நல்கி உதவியமை வரலாற்றாசிரியர்கள் எழுத்திலே பொறிக்க இப்படியான கண்ணோட்டம் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கலாம் அன்றோ.

ஆண்டு 9, 10, 11

1989-ம் ஆண்டுக்கான வகுப்புகள்

ஆரம்பம்: Dec 5

விஞ்ஞானம்

இரா செல்வவடிவேல்

• NIRU •

TUITION CENTRE

KONDAVIL

11187

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
**வீடியோ விகோன்ஸ்**
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டு வீதி

வார
# முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

★ யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று

# மாணவரின் அடையாள மறியலால் பட்டமளிப்பு விழா தாமதமானது

**யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா நேற்றுக்காலை ஆரம்பமாக இருந்த வேளையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவை அடையாள மறியல் போராட்டத்தை நடத்தியதால் ஒன்பது மணிக்கு ஆரம்பமாக இருந்த பட்டமளிப்பு விழா பத்தரை மணிக்கே ஆரம்பமானது**

மாணவர்களுக்கு போதிய பாதுகாப்பில்லை, மாணவர்கள் உடல், உளரீதியாக தாக்கப்பட்டு அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனுல் பட்டமளிப்பு விழா நடத்துவதை ஆட்சேபித்து மாணவர் பேரவை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது. மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கும் பட்டமேற்க வந்தவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது இதில் மாணவர் பிரதிநிதி ஒருவர் தாக்கப்பட்டதையடுத்து பட்டமளிப்பு விழாவை நடாத்த அனுமதிக்கபபோவதில்லை என மாணவர்கள் கோஷமிட்டவாறு பட்டமளிப்பு அணிவகுப்பு ஊர்வலம் செல்லும் பாதையில் அமர்ந்து மறியல் போராட்டம் செய்தனர்.

இச்சம்பவங்களையடுத்து பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இப்பிரச்சனையில் தலையிட்டு கைகலப்பில் ஈடுபட்ட இருசாராரையும் சமரசத்திற்கு கொண்டுவந்ததையடுத்து பட்டமளிப்பு விழா வைபவம் காலை பத்தரை மணிக்கு ஆரம்பமானது

அடையாள மறியல் போராட்டம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர் பேரவைத்தலைவர் திரு. என். சுந்தரமூர்த்தி "முரசொலிக்கு" கருத்து தெரிவிக்கையில் இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்பில்லை இந்தவேளையில் ஆடம்பரமான பட்டமளிப்பு விழா நடாத்தப்பட வேண்டியது அவசியம் தானு? மாணவர்களின் உயிருக்கு உத்தரவாதமில்லை. ஓப்பீட்டளவில் இந்த விழா முக்கியமானதாக எமக்குத் தெரியவில்லை. இந்த விழாவை ஒத்திவைக்குமாறு ஏற்கனவே நிர்வாகத்திற்குத் தெரிவித்தோம். ஆனுல், நிர்வாகம் திட்டமிட்டவாறு நடத்தி முடிப்பதென முடிவெடுத்தது. ஆயினும், எமது ஏகோபித்த எதிர்ப்பைத் தெரிவிக்கு முகமாக ஒரு மணித்தியாலம் அடையாள மறியல் போராட்டத்தை நடாத்தினேம். இனித் தொடர்ந்து வகுப்புக்களுக்குச் சமுகமளிப்பதா இல்லையா என ஆராய்வதற்காக நாளை திங்கட்கிழமை மாணவர்களின் பொதுகூட்டம் ஒன்று நடைபெறும் எனத் தெரிவித்தார்

பட்டமளிப்பு விழா நடைபெற்ற கைலாசபதி கலை அரங்கிற்கு ஆலவட்டக் குடையில் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா உட்பட பதிவாளர், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராசா பட்டமளிப்புவிழாவை மங்கள விளக்கேற்றி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

## திருமலை அரசாங்க அதிபராக தமிழரை நியமிக்க கோரிக்கை

அறுபத்தைந்து சதவீதமான தமிழ்பேசும் மக்களைக்கொண்ட திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க அதிபராகத் தமிழ்பேசும் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டுமென முஸ்லிம் லீக் வாலிபமுன்னணிகளின் திருமலை மாவட்ட சம்மேளனம் உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்டுள்ளது.

மூவின மக்களும் சம அளவில் வாழும் திருமலை மாவட்டத்தின் அரச அதிபராக குறைந்தது இரு வருடங்களுக்கு ஒரு முறையாவது மூவினத்தவரும் கடமையாற்ற சுழற்சி முறையிலான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

இதுவரை காலமும் தமிழ் பேசும் அரச அதிபர் நியமிக்கப்படாமல் இருந்தது பெரும் குறையாகும். இதை நிவர்த்தி செய்ய தமிழ் அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்படின் மேலதிக அரசாங்க அதிபர்களாக சிங்களவர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் நியமிக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

### மலகூடச்சூழ்க்குள் . . .

சடலங்களைப் பொலிஸார் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

நேற்று முன்தினம் இரவு இரு சடலங்களும் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளன. நேற்றுக் காலை வவுனியா சூசைப்பிளளையார் குளத்திற்கு அருகில் டயர்கள் போட்டு சடலங்கள் எரிக்கப்பட்டதற்கான அடையாளமும் இருந்தது.

### ஸ்ரீமாவோ தலைமை. . .

மூலம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சிகளின் கூட்டணியுடன் இணையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பிரதமர் பிரேமதாஸவும் ஜனுப் அஷ்ரப்பும் நேற்று முன்தினம் இரவு சந்தித்துப் பேசவிருந்தனர் எனவும் இறுதி நேரத்தில் அச் சந்திப்பு ரத்து செய்யப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஈ. பி. ஆர். எல். எப். . . .

ஈ.பி.ஆர். எல். எப். கட்சிக்கு போனஸாக மேலும் இரு இடங்கள் கிடைக்கவுள்ளன இதன் மூலம் இக்கட்சி உறுப்பினர்களின் தொகை முப்பத்தெட்டாக அதிகரிக்கும்.

ஈ. என். டீ எல். எப் கட்சி கிழக்கு மாகாணத் தேர்தலில் ஐந்து இடங்களைப் பெற்றதுடன் அதன் மொத்த இடங்கள் பதினேழாக அதிகரித்துள்ளது. இக்கட்சி வடக்கில் ஏற்கனவே பன்னிரண்டு இடங்களைப் பெற்றுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸுக்கு பதினேழு இடங்களும், ஐ. தே. கட்சிக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளது.

### ஸ்ரீமாவோவை. . .

யில் இணையவுள்ளதாகவும், அம்மையார் உடன்படிக்கையை ரத்துச் செய்துவிட்டு அதைவிடச் சிறப்பான நீதியான முறையில் இனப் பிரச்சினையைத் தீர்க்க உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ். மாவட்ட தற்காலிக மின்விநியோக நேர விபரம்

சுன்னுகம் மின் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர்களின் மூலம் யாழ் மாவட்டத்திலுள்ள மின் அத்தியட்சகர்கள் பிரிவு ரீதியாகப் பின்வரும் நேரங்களுக்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது மின்மாற்றி அமைந்துள்ள பகுதி ஒன்றுக்கு ஒரு மணித்தியாலம் என்ற அடிப்படையில் தற்காலிகமாக இந்த மின் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

இதன் பிரகாரம் வட்டுக்கோட்டை, வேலணை மின் அத்தியட்சகர் பிரிவுகளுக்கு காலை எட்டு மணி முதல் ஒன்பது மணி வரையும், பருத்தித்துறை மின் அத்தியட்சகர் பிரிவுக்கு காலை ஏழு மணி முதல் எட்டு மணி வரையும், காங்கேசன்துறை மின் அத்தியட்சகர் பிரிவுக்கு காலை ஒன்பது மணி முதல் ஒன்பதரை மணி வரையும், பின்னர் பத்து மணி முதல் பத்தரை மணி வரையும், சாவகச்சேரி மின் அத்தியட்சகர் பிரிவுக்கு பகல் பதினெரு மணி முதல் பன்னிரெண்டு மணி வரையும் இந்த மின்விநியோகம் நடைபெறும்.

யாழ். மின் அத்தியட்சகர் பிரிவில் போதனு வைத்தியசாலைக்கு இருபத்துநான்கு மணிநேரமும் மின்சாரம்வழங்கப்படும். கச்சேரி, பண்ணை, கோட்டை, புகைபிரதநிலையப் பகுதி, யாழ். பஜார் பகுதிகளுக்கு மாலை ஐந்தரை மணி முதல் காலை ஏழு மணி வரை மின்சாரம் வழங்கப்படும். யாழ்ப்பாண மின் அத்தியட்சகர் பிரிவின்கீழ் வரும் ஏனைய பகுதிகளுக்கு காலை ஏழரை மணிக்கும் – மாலை ஐந்தரை மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஒரு மணி நேரத்திற்கு பகுதி பகுதியாக மின்சாரம் வழங்கப்படும்,

### இரு நாட்களில் . . .

யமைச்சர் திரு.பா.சிதம்பரம் நேற்று தமிழ்நாட்டில் சிவகங்கையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழர் ஆட்சியமைக்க அறுநூற்றி மூன்று இந்திய வீரர்கள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர் என்று குறிப்பிட்ட அமைச்சர்; மாலைதீவில் இருமணி நேரத்தில் புரட்சியாளர்களை விரட்டியடித்து தென் ஆசிய நாடுகள் அனைத்துக்கும் பாதுகாப்பு அளிக்கும் என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

### திருநெல்வேலி . . .

திராட்சமாலை, நெற்றிப்பட்டி, பவுண்மாலை, திருக்கோரணம் உட்பட மொத்தம் நாற்பது பவுண் நகைகள் இந்தக் கோஷ்டியால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இது தவிர குருக்களுக்குச் சொந்தமான பெருமதிமிக்க பொருட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன. இந்த வீட்டுக்கு அருகில் உள்ள மின்சாரசபை முகாமி செல்லையா பாண்டிரங்கன் என்பவரின் வீட்டிலும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இதேயிரவு ஒன்பதுமணி போல் நல்லூர் அரசடி வீதி என் நடராஜா என்பவரின் வீட்டிலிருந்து பதினறுபவுண் தங்கநகைகள் உட்பட பெருமதிமிக்க பொருட்களும், நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி எஸ். சிவநாயகமூர்த்தியின் வீட்டிலிருந்து பதினெரு பவுண் தங்க நகைகள், கமரா, ரேடியோ, சைக்கிள் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

**காலமானர்**

**கலாநிதி R. துரைராஜா**

பலாலி ஆசிரியா பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி R. துரைராஜா 17-11-88 இல் காலமாகிவிட்டார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேம்.

தகவல்:
**திருமதி P. துரைராஜா**

11202

**காலமானர்**

**தம்பிராசா தர்மசீலன்**

இவர் புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பிராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அருமை புதல்வரும் அன்னலெட்சுமி, சந்திராதேவி, சாரதாமணி, யோகமலர், தேன்மொழி, மாலினி, நிமலராணி, தேவரஞ்சினி ஆகியோரின் சகோதரரும், பூபாலசிங்கம், சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்ஞரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணி அளவில் நடைபெற்று, தகனக்கிரிகைக்காக மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேம்.

தகவல்:
**பூபாலசிங்கம்**

11203

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ. இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 27 . 11 88-ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது